

# கதிர்



## அரசியல் இலக்கு எது?



*15 ஒகஸ்ற் 1990
*அரசியல் இதழ்: 02
*அன்பளிப்பு: 5,-DM

# கதிர்

"மெல்லெனப் பாயும் ஓடை
கல்லையும் உருட்டிப் பாயும்."

* 15 ஒக்ற் 1990
* அரசியல் இதழ்: 02


இலங்கையின் வட-கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல்களும், அதனால் விளைந்த அழிவுகளும் சில சர்வதேச சக்திகளுக்கு விருந்தாகிப் போயுள்ளன.

வட-கிழக்கில் மோதல்கள் ஆரம்பமான போது, காலம் நீடிக்குமாயின் மீண்டும் இந்தியா வகிக்கக் கூடிய பாத்திரம் பற்றி செய்திகள் வந்து கொண்டிருக்கையில், புதிதாக ஐரோப்பிய நாடுகளின் அக்கறை பற்றி பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் 87 க்கு முன்னர் இதேபோல் யுத்த நெருக்கடி ஒன்றை சந்தித்துக் கொண்டிருக்கையில் இம் மக்களை மீட்டு, அமைதி காக்கப் போவதாகக் கூறிக் கொண்டு இந்தியா நேரடியாகத் தலையிட்டு வட-கிழக்கு முழுவதும் இராணுவத்தை பரப்பி விட்டிருந்தது.

இதன்பின் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை இருப்பதாக கூறிக் கொள்ளும் எவரும் இலங்கை அரசியலில் இலகுவாக நுழைவதற்கான அனுமதியுடையவர்கள் என எண்ணப்படலாயினர். இதனைத் தமது தார்மீக உரிமையாக சில வெளிநாட்டுச் சக்திகள் தமக்குத் தாமே வழங்கியுள்ளன. ஐரோப்பிய நாடுகளே இந்த விடயத்தில் முன்னணி வகிக்கின்றன.

உலக அரங்கில் வல்லரசுப் போருக்கான முறுகல்கள் தணிந்துள்ள நிலையில் ஐரோப்பிய நாடுகள் வளர்முக நாடுகளிலும், குறிப்பாக தமது முன்னைய காலனித்துவ தேசங்களிலும் தமது செல்வாக்கை அழுத்துவதில் நாட்டம் கொண்டுள்ளன. இலங்கை சந்திக்கப் போகும் புதிய தலையீட்டு வடிவமும் இந்தச் சர்வதேச சூழ்நிலையில் இருந்தே பிறக்கின்றது.

தமிழ் பேசும் மக்கள் தமக்கான பாதுகாப்பான எதிர் காலத்தை தேடிக் கொள்ளும் போராட்டத்தில் தற்போது கருக்கொண்டுள்ள சர்வதேச "ஆதரவுகளை" கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

வட-கிழக்கில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அண்மைய நிகழ்வுகளில் கொல்லப் பட்டுள்ளனர். முன்னெப்போதும் இல்லாதவாறு இம்முறை முஸ்லிம் மக்கள் சம்மாந்துறை, ஏறாவூர், காத்தான்குடி பகுதிகளில் நூற்றுக் கணக்கில் கொல்லப் பட்டுள்ளனர். சுமார் இரண்டு இலட்சம் முஸ்லிம் மக்கள் அகதிகளாக உள்ளனர்.

தமிழ் மக்கள் தமது பாதுகாப்பிற்காக நடத்திவரும் போராட்டத்தின் நியாயங்களின் மறு பக்கமாகவே இக் கொலைகள் சித்தரிக்கப் படுகின்றன. இந் நிலைமை தொடருமாயின் இலங்கை அரசியலில் நாட்டம் கொண்டுள்ள சர்வதேச சக்திகளின் தலையீடுகளுக்கு மெருகூட்டுவதாகவே முடிந்துவிடும். ●


அட்டைப்படம்:
(புகைப்படக்கலவை):

ந. குமார்.
கே. கஜேந்திரன்.
புஸ்பகுமார மத்துகம.



**புதிய முகவரி:**

KATHIR
POSTFACH 61 04 94
1000 BERLIN 61
WEST GERMANY

# அரசியல் இலக்கு எது?

*இந்தியாவிற்குப் பதிலாக ஐரோப்பிய தலையீட்டை ஜனாதிபதி நாடுகிறார்.*



"நாம் யுத்த நிறுத்தம் மேற்கொண்டு மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாராக உள்ளோம். இந்த யுத்தத்தை ஆரம் பித்த விடுதலைப் புலிகளே முதலில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் ஏன் இந்த யுத்தத்தை ஆரம்பித்தார்கள் என்பது எனக்குப் புதிராகவே உள்ளது. வட கிழக்கில் புதிய மாகாண சபைத் தேர்தலை நடாத்து வதற்கு நாம் தயாராக உள்ளோம். ஆனால் தேர்தலையோ அல்லது யுத்த நிறுத்தத்தையோ நாம் மேற்கொள்வதாயின் இனிமேல் சாவதேச சமூகங்களின் ஈடுபாடு இருக்கவேண்டும். இந்த முடிவுகளையே இன்றைய நிலை தொடர்பாக நாம் மேற்கொண்டுள்ளோம்." இவ்வாறு இலங்கையின் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா புத்தளத்தில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டம் ஒன்றில் வைத்து கூறியிருந்தார்.

"இந்திய இராணுவத்தை விடவும் எமது இராணுவம் எந்த வகையிலும் குறைந்ததல்ல. எமது இராணுவம் வட கிழக்கை மீட்கும் வரை இன்றைய போர் தொடரும். புலிகள் ஆயுதங் களை ஒப்படைத்தால் மட்டுமே போர்நிறுத்தம் ஏற்படமுடியும். ஜே.வி.பீ. இனரை பூண்டோடு அழித்தது போல் புலிகளை அழிக்கும் வரை ஓயமாட்டேன்". பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா பத்திரிகை யாளர் மத்தியில் இவ்வாறு எடுத்துக்கூறி யிருந்தார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பிரச்சார பீடிகையும் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா வின் சபதமும், இலங்கை அரசின் இரட்டைத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளன. ஒன்றுக் கொன்று முரணான இப் பேச்சுக்களின் மத்தியில் இதுவரை 7 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் வட கிழக்கில் அகதிகளாகியுள்ளனர். 60,000 பேர் வரையில் தமிழகம் சென்று தஞ்சம் அடைந்துள்ளனர். இதுவரையில் 2000 பேர் வரையான பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது. வட கிழக்கில் அவசிய உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இத்தனை அழிவுகளை சந்தித்துள்ள இம் மக்கள் இந்த யுத்தத்தின் அரசியல் இலக்கு என்ன என்பதை தேடிக் கொண்டிருக்கின்றனர்.

## விடுதலை அமைப்புகளுடன் ஜனாதிபதியின் சந்திப்பு

இலங்கை அரசு தான் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் ஆயுதமேந்திய சக்திகளுக்கு எதிரானதேயன்றி தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான தல்ல என்ற தனது வழமையான சுலோகத்தை இசைக்கத் தொடங்கியுள்ளது. இதற்கு ஏற்ப இயக்க முரண்பாடுகளை கையாளவும் துணிந்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா விடுதலைப் புலிகளின் எதிரணியாக விளங்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ்., ஈ.பி.டி.பி., ரெலோ, புளொட், தமிழர் விடுதலை கூட்டணி ஆகிய அமைப்புகளை தம்முடன் பேச வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இவ்வமைப்புகள் யாவும் ஜனாதிபதியை சந்திப்ப தற்கு முன்னதாக தமக்குள் ஒன்றுகூடி வடகிழக்கு நிலைமை தொடர்பாக ஆராய்ந்திருந்தன. இவ் ஆறு அமைப்புகளில் ஒன்றான ஈ.என்.டி.எல்.எவ்., ஏனைய ஐந்து அமைப்புகளுடனும் தாம் கொள்கை சித்தாந்த வேறுபாடுகள் கொண்டிருப்பதாகக் கூறிக் கொண்டு

ஜனாதிபதியைத் தாம் தனியே சந்திக்கப் போவதாக முடிவு செய்திருந்தனர்.

இதன்படியே ஈ.என்.டி.எல்.எவ். உம் ஏனைய ஐந்து அமைப்புகளும் ஜனாதிபதியைத் தனித் தனியே சந்தித்திருந்தனர். வட கிழக்கில் விடுதலைப் புலிகளை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு தாம் ஆதரவு நல்குவதாக எடுத்துக் கூறி புதிய மாகாண சபை தேர்தலையும், பொதுத் தேர்தலையும் வைக்குமாறு இவ் அமைப்புகள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன. வட கிழக்கில் நடாத்தப்பட்டு வரும் அநாவசிய கைதுகள் இராணுவத்தின் இனந்தெரியாத கொலைகள் மற்றும் வட கிழக்கிற்கான உணவு மருத்துவ தட்டுப்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறி யிருந்தனர். இவை அனைத்தையும் ஜனாதிபதி அவதானமாகச் செவிமடுத்தார். தொடர்ந்த சந்திப்பு களுக்கும் அவர் சமிக்கை காட்டியிருந்தார்.

## ஈரோஸின் கோரிக்கைகளும் பாராளுமன்ற பகிஷ்கரிப்பும்

இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளாக 13 பாராளுமன்ற அங்கத்துவத்தை உடைய ஈரோஸ், வடகிழக்கில் நடைபெற்று வரும் மோதல்களை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் தமிழ் மக்களை அழிப்பதற்காக நிகழ்த்தப்பட்டு வரும் இராணுவ வன்முறையாக விபரித்துள்ளது. இதனால் வட கிழக்கில் இலங்கை அரசு யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்து மீண்டும் பேச்சுவார்த்தையை தொடர வேண்டும் என வேண்டுகோள் விடுத்து இக் கோரிக்கை மீதான கவன ஈர்ப்பிற்காக பாராளுமன்ற கூட்ட தொடர் களையும் பகிஷ்கரிக்கத் தொடங்கியது. யுத்தநிறுத்தத்துக்கு அரசு இணங்கமறுக்குமாயின் பாராளுமன்ற ஆசனங்களை இராஜினாமா செய்வ தெனவும் தீர்மானித்திருந்தது.

அதேவேளை வடகிழக்கில் இலங்கை இராணு வத்துக்கு எதிராக தற்காப்பு இராணுவ நடவடிக்கை களில் ஈடுபடுவதற்காக விடுதலை புலிகளின் உயர் பீடத்துடன் பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபட்டிருந்தது. இந்திய இராணுவம் வெளியேறிய போது விடுதலை புலிகளிடம் வழங்கிய ஆயுதங்களை மீளத்தரும்படி கேட்டிருந்தது.

இம் முடிவுகளை அவதானித்த இலங்கை ஜனாதிபதி ஈரோசின் பாராளுமன்றப் பிரதிநிதி களையும் தமது அமைச்சர் அவையின் முக்கிய அதிகாரிகளையும் உள்ளடக்கிய விசேட கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார். இக் கூட்டத்தில் யுத்த நிறுத்தம் பற்றியும் வடகிழக்கிற்கான சீரான உணவு மருத்துவ விநியோகம் பற்றியும் விவாதிக்கப் பட்டிருந்தன. யுத்த நிறுத்தத்திற்கான சமிக்கைகளை முதலில் விடுதலைப் புலிகளே தரவேண்டும் எனவும் இதற்கான நல்லெண்ணத்தை அவர்கள் காட்ட விரும்புவார்களாயின் யாழ் கோட்டை முகாமிற்குள் காயமடைந்துள்ள படையினருக்கு சிகிச்சை அளிக்க விடுதலைப் புலிகள் விட்டுக் கொடுக்க வேண்டு மெனவும் அவர்கள் தம்வசம் உள்ள பொலிசாரை நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டுமெனவும் இலங்கை அரசின் சார்பில் முன் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

இந் நிபந்தனைகள் முன்மொழியப்பட்டு சில நாட்களின் பின்னர் யாழ் கோட்டை இராணுவ முகாமிற்குள் காயமுற்றிருந்த படையினரில் 8பேரை இலங்கை விமானப் படை கெலிகொப்டர் மூலம் தரையிறங்கி மீட்டுச் சென்றது.

## விடுதலை புலிகள்: கிழக்கில் மறைந்துதாக்குதலும் வடக்கில் நேரடிமோதலும்

யூன் மாதம் 10ந் திகதி முதல் வட கிழக்கில் மோதலைச் சந்தித்து வரும் விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களில் நகர்ப்புறங்களை விட்டு தந்திரோபாய ரீதியில் தாம் பின் வாங்கி இருப்பதாக அறிவித்திருந்தனர். இப் பின்வாங்கல்களை ஈடுசெய் வதற்காக வட மாகாணத்தில் அமைந்துள்ள மாங்குளம், கிளிநொச்சி, கொக்காவில், யாழ் கோட்டை, காங்கேசன்துறை முதலான இராணுவ முகாம்கள் மீது ஏககாலத்தில் பலமான தாக்குதல் களை தொடுத்து வந்தனர். கொக்காவில் இராணுவ முகாமை இவர்கள் முற்றாகத் தகர்த்ததுடன் இராணுவம் காவல் காத்து வந்த ரூபவாகினி அஞ்சல் நிலையத்தையும் நிர்மூலமாக்கினர்.

கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலுக்குப் பின் கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் பிராந்திய தலைமையகத்திற்கு சர்வதேச செஞ்சிலு வைச்சங்க பிரதிநிதிகளும் பத்திரிகையாளர்களும் வரவழைக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவை சங்கத் திடம் தாம் ஏற்கனவே கைது செய்து வைத்திருந்த 17 பொலிசாரை ஒப்படைத்தனர். தம்வசம் உள்ள ஆயுதங்களை ஒப்படைத்தால் மட்டுமே மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறும் என இலங்கை அரசு முன்நிபந்தனை விதிக்குமாயின் விடுதலைப் புலிகள் நீண்ட காலப் போர் ஒன்றுக்கே தம்மைத் தயார் செய்ய வேண்டி வரும் என அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பத்திரிகையாளரிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

இந்த சம்பவங்கள் யாவும் விடுதலைப் புலிகள் மீண்டும் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான சம்மதக்குறிகள் என்பதில் ஐயமில்லை .

## யுத்த நிறுத்தத்துக்கு இலங்கைதரப்பு மறுப்பு



இந்த அறிகுறிகளுடன் கொழும்பு திரும்பிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இலங்கை அரசை ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை மேற் கொள்ள ஆலோசனை கூறியபோது அதற்கு இணங்க அரசதரப்பு மறுத்துவிட்டது. யுத்த முனையில் முன்னேறிக் கொண்டிருக்கும் இராணுவத்தை யுத்த நிறுத்தம் செய்யும் படி எப்படிக் கோரமுடியும் எனக் கூறி அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா கோரிக்கையை நிராகரித்தார்.

அமைதி வழிப்பட்ட தீர்வு ஒன்றிற்கு தமது அரசு தயாரெனத் தெரிவித்து வரும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பிரச்சாரத்திற்கும் வட கிழக்கை மீட்கும்வரை போர் நிறுத்தம் நடக்காது என்ற அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னாவின் பிடிவாதத் திற்குமிடையே இலங்கை அரசு வட கிழக்கில் சாதிக்க விரும்புவது என்ன என்பது தற்போது கவனக்கிற்குரியதாய் மாறிப்போயுள்ளது.

## இந்தியாவிற்கு சமாந்தரமாக ஐரோப்பிய நாடுகளின் தலையீடு

"வட கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையை விடுதலைப் புலிகளே தோற்றுவித்துள்ளனர். விடுதலைப் புலிகள் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளை நாடாமல் நாட்டின் வட கிழக்கில் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்து மக்களுக்கு துயரத்தை ஏற்படுத்தும் வகையிலும் ஆயிரக் கணக்கான மக்கள் வேறு நாடுகளில் அடைக்கலம் புகும் வகையிலும் நடந்து கொள்வது குறித்து ஐரோப்பிய சமூகம் வருத்தம் தெரிவிக்கிறது. மேலும் ஜனாதிபதி முன்வைத்துள்ள கருத்தொருமிப்பின் மூலம் இலங்கையின் சுதந்திரத் தையும், ஐக்கியத்தையும் பேணும் வகையில் இத்தீவில் உள்ள பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டுமென 12 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் (European Economic Community) பொதுச் செயலாளர் பகிரங்க அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார். இலங்கைக்கு 160 கோடி ரூபாவை உதவியாக வழங்கியுள்ள ஐரோப்பிய நாடுகளின் செயலாளரே இவ் அறிக்கையை விடுத்துள்ளார். வட கிழக்கில் நீண்ட காலமாக புனர்வாழ்வு, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வரும் பிரித்தனியாவைச் சேர்ந்த குழந்தைகளுக்கான காப்பு நிதியம், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (UNHCR), ரெட்பானா, நோறாட், சர்வதேச செஞ்சிலுவை சங்கம் முதலான 16 உதவி வழங்கும் நிறுவனங்கள் இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் யுத்த நிறுத்தம் செய்யும்படி வழமைக்கு மாறாக முதன்முறையாக அரசியல் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளன. இம் மோதல்களின் மத்தியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உணவு விநியோகங்களை மேற் கொள்வதிலும், தபால் போக்குவரத்துகளை ஒழுங்கு செய்வதிலும், காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றது.

இந்தப் பின்னணியையே இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சர்வதேச சமூகங்களின் ஈடுபாட் டுடனேயே தாம் இனிமேல் காரியங்களை ஆற்றப் போவதாகக் கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது. வட கிழக்கு மோதல்களைப் பயன்படுத்தி மீண்டும் இந்தியா தலையிடாது இருப்பதற்கான ஓர் புதிய ஏற்பாடே இது என்பது எவருக்கும் புரியக்கூடிய ஒன்றே.

## தமிழகத்துக்கு வந்து குவியும் இலங்கை அகதிகள்

ஜனாதிபதியின் இந்தப் புதிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இலங்கை நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக, இந்திய அரசின் வெளியுறவு அதிகாரி அபிப்பிராயம் தெரிவித்த சில நாட்களில் தலைமன்னார் இராமேஸ் வரத்திற்கு இடையே தரித்து நின்ற இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான இரு பீரங்கி படகுகளை இந்திய கடற்படை கைப்பற்றி தூத்துக்குடிக்கு இழுத்துச் சென்றது.

இதையடுத்து மன்னார் கடற்பிரதேசம் வழியாக பெருவாரியான தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்குள் நுழைய தொடங்கினர். இவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரமாக அதிகரித்து விட்டதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது. 1985ம் ஆண்டளவில் இதே போல் இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான பீரங்கிக் கப்பல்களை இந்தியக் கடற்படை கைப்பற்றிச் சென்றதும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்ததை இங்கு நினைவு கூருவது பொருத்தமானது.

## வட பகுதியில் யுத்த சூனியப்பிரதேசம் ஒன்றை இலங்கை தேடுகிறது

அகதிகளைக் கருவியாகப் பயன்படுத்தி இந்தியா மீண்டும் தலையிட இடம் கொடுக்காது இருக்க இலங்கை அரசு இப்போது வட பகுதியில் யுத்தம்மற்ற

பகுதி ஒன்றைத் தேடிவருகிறது. இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடனும், ஐக்கிய நாடுகளின் அகதிகளிற்கான உயர் ஸ்தானிகருடனும் (UNHCR) இலங்கை அரசு இரு தடவைகள் பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளது. தலைமன்னாரை யுத்த சூனியப் பிரதேசமாக மாற்றி அங்கு அகதிகளைப் பராமரிப்பது பற்றியும் யாழ் நகரையும் அதைச் சார்ந்துள்ள கடற் பகுதிகளையும் மருத்துவ சிகிச்சைக்குரிய யுத்தமற்ற பிரதேசமாக ஆக்குவது பற்றியும் பேசியுள்ளது. இவை இன்னும் கைகூடாத போதிலும் வட பகுதியில் யுத்த சூனியப் பிரதேசம் ஒன்றைப் பிரகடனம் செய்வதன் மூலம் இந்தியத் தலையீட்டைத் தவிர்ப்பது மட்டுமல்லாமல் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தையும், மோதல்களையும் ஏககாலத்தில் பேணமுடியும் என எண்ணுகிறது.

## ஜே.வி.பி. இனரை அழிப்பதில் கையாண்ட உத்தி முறையே இப்போது வடகிழக்கிலும்

இந்தியத் தலையீட்டை இல்லாது ஒழிப்பதற்கு மாற்றுவழியாக ஐரோப்பிய சமூகங்களின் தயவை நாடியுள்ள இன்றைய ஜனாதிபதி ஜே.வி.பி. மீது தான் பிரயோகித்து வெற்றிகண்ட நெறிமுறைகளையே இப்போது வடகிழக்கில் பின்பற்ற எத்தனிக்கின்றார்.

இந்திய இராணுவம் இலங்கைக்குள் நுழைந்த போது இந்திய எதிர்ப்பு வாதத்தை கோரிக்கையாக்கிக்கொண்ட ஜே.வி.பி., அரசைக் கவிழ்ப்பதற்காக தென்பகுதி சிங்கள இளைஞர்களின் உணர்வுகளை கிளர்ந்தெழ செய்திருந்தது. அரச இயந்திரங்களுக்கு எதிராக சிவில் நிர்வாகத் தடைகளை பிரகடனம் செய்து சில மாவட்டங்களில் திகிலூட்டியும் இருந்தது. வெற்றிக் களிப்பின் ஒரு கட்டத்தில் அரசுக்கு எதிரான மாற்று இயக்கங்கள் மீது தடையும் விதிக்கத் தொடங்கியது. அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை ஆதரித்து வந்த சோசலிச மக்கள் இயக்கம் (SPM), சுயாதீன மாணவர் ஒன்றியம் (ISU), எழுதுவினைஞர்கள் பொதுச் சங்கம் (GCSU), நவ சம சமாஜக் கட்சி (NSSP), இலங்கை சம சமாஜக் கட்சி (LSSP) ஆகியவற்றிற்கு ஜே.வி.பி. தடை விதித்தது. இவ் அமைப்புகளின் சில முக்கியஸ்தர்களையும் கொலை செய்தது. ஜே.வி.பி. ஆல் தடை செய்யப்பட்ட இவ் அமைப்புகளுடன் நல்லுறவைப் பேணிய இன்றைய ஜனாதிபதி, ஜே.வி.பி. முன்வைத்துச் செயற்பட்ட " இந்திய இராணுவமே வெளியேறு " என்ற கோசத்தை தாமே உச்சரிக்கத் தொடங்கினார். சில வேளைகளில் இந்தியாவிற்கு எதிரான கோசங்களை எழுப்புவதில் ஜே.வி.பி. யை விட தீவிரமான தலைவராகத் தன்னைக் காட்டிக் கொண்டார். ஜே.வி.பி. யின் அரசியல் கோசத்தை ஜனாதிபதி உள்வாங்கியது முதல் அதன் தலைமைத் துவத்தில் தடுமாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அப்போது அறிமுகம் செய்து வைக்கப் பட்ட சர்வகட்சி மாநாட்டில் ஜே.வி.பி. கலந்து கொள்வதா இல்லையா என்றவிடயம் இவ் இயக்கத்தின் தலைமைப் பீடத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியது.ஏழு பேர் கொண்ட ஜே.வி.பி. இன் தலைமைப் பீடத்தில் ரோகண விஜயவீராவின் தலைமையிலான நான்கு உறுப்பினர்கள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டுமென விவாதித்தனர். இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக உள்ள உபதிச கமநாயக்காவின் தலைமையின் கீழான மூன்று பேர் சமரசம் எதையும் மறுத்து வந்தனர். இவ்வாறு இந்திய எதிர்ப்பு வாதத்தினால் ஜே.வி.பி. இன் தலைமைப் பீடத்தினுள் விதைக்கப்பட்ட கருத்து வேற்றுமைகள் இவ் இயக்கத்தின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றவும் அழிக்கவும் ஜனாதிபதியிற்குச் சந்தர்ப்பம் அளித்தது.

ஜே.வீ.பி. மீது நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்த காலங்களில் ஜனாதிபதியும், அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னாவும் வெவ்வேறு கோணங்களில் கருத்துக்கள் தெரிவித்து வந்துள்ளனர். இதே அணுகுமுறையே இப்போது திட்டமிட்ட முறையில் வட கிழக்கு விவகாரங்களில் பின்பற்றப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

## ஜனாதிபதிக்கு வாய்ப்பளிக்கும் இன்றைய அரசியல் வெற்றிடம்



விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே ஒரு வருடத்திற்கு மேலாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள பிரதான கோரிக்கைகளான இந்திய இராணுவத்தை வெளியேற்றுவது, வட கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது, வட கிழக்கிற்கான புதிய தேர்தல் ஒன்றை நடாத்துவது ஆகிய மூன்று விடயங்களையும் நடைமுறையில் நிறைவேற்றியுள்ள இன்றைய ஜனாதிபதி தேர்தலை நடாத்தி அதன் மூலம் தெரிவாகும் பிரதிநிதிகள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சனைகள் பற்றி பேசப் போவதாகக் கூறியிருக்கிறார். இதன் மூலம் விடுதலைப் புலிகளின் இடைக்கால அரசியல் கோரிக்கையை உள்வாங்கி தானே உச்சரிக்க ஆரம்பித்து விட்டார் என்றே அனுமானிக்கப் படுகிறது. வட கிழக்கு மோதல்கள் தோற்றுவித்துள்ள அரசியல் வெற்றிடம் ஜனாதிபதியின் நோக்கங்களுக்கு சாதகமாக அமைந்துள்ளதாகவே அவதானிக்கப்படுகிறது. ●

# செய்திச் சேவையா, பிரச்சார ஊடகங்களா?

ர.சுந்தரம்

மூன்றாம் அணி நாடுகளின் மேலான மேற்கு நாடுகளின் ஆதிக்கத்திற்கு உறுதுணையாக இருந்து ஒத்தாசை புரிவது அவர்களது உலகச் செய்தியின் போக்கு மீது (Information flow) கொண்டுள்ள கெட்டியான கட்டுப்பாடாகும்.

இவர்களிடமிருந்தே எமது நாடுகளின் பொது ஊடகங்களுக்கான செய்திகள், தகவல்கள் பெறப்படுகின்றன. மேலும் உயர்வான தொழில்நுட்பமும் (Advanced Technology) இவர்கள் கைவசமே இருப்பதால் இவர்களது காரியம் மிகவும் இலகுவானதாகி விடுகின்றது.

எனவே இவர்களால் எவ்வளவு எளிதில் எம்முள்ளே ஊடுருவல்களையும் செல்வாக்குகளையும் ஏற்படுத்திக் கொள்ளவும் தமது கருத்துக்களையும் கலாச்சார, வாழ்க்கைமுறை, நாகரீகங்களையும் திணித்து விடவும் அவற்றிலும் ஒருபடி மேலே சென்று எம்மைப் பற்றிய தகவல்களைத் திரித்து எமக்கே தந்து எம்மையே நம்ப வைத்து விடவும் முடிகிறது.

## சீன மாணவர் போராட்டமும் பி.பி.சி. ஒலிபரப்பும்.

கடந்த வருடம் சீனக்குடியரசில் மாணவர்களால் முன்னின்று நடாத்தப்பட்ட புரட்சியின் முடிவில் இடம் பெற்ற தினமன் சதுக்க (Tinnaman Square) படுகொலைகளுக்கு சில மாதங்களின் பின்னர் அப் புரட்சி குறித்து சீன நிபுணர் என வர்ணிக்கப்படும் ஜோன் கிற்றிங் (John Gitting) என்பவர் தான் எழுதிய புத்தகத்திலும், பி.பி.சி. தென்ஆசிய நிருபரும் கார்டியன்(Guardian) பத்திரிகை நிருபருமான ஜோன் ரெட்டி (John Reddy) கார்டியன் பத்திரிகைக்கு எழுதிய விரிவான கட்டுரைகளிலும், மேற்கத்திய செய்தி ஊடகங்கள், தாபனங்கள் பற்றி உள்ள குறிப்புகளிலும் இந்நிலைமை நன்கு ஊர்ஜிதம் செய்யப்படுகின்றது.

இவற்றில் வெளிவந்துள்ள குறிப்பொன்று இப்படி கூறுகிறது.

"சீன தேசத்தில் செய்தி ஊடகங்கள் யாவுமே அரசின் கைவசம் உள்ளன. எனவே மக்கள் அவற்றினால் தரப்படும் செய்திகளை நம்பாது மேற்கு நாடுகளின் செய்தித்தாபனங்களின் ஒலி பரப்புகளிலேயே தகவல்களுக்கு தங்கியுள்ளனர். மேலும், இச் சேவைகள் குறிப்பாக பி.பி.சி. இன் பல சீன பேச்சு மொழிகளிலான ஒலிபரப்புக்கள் வெறும் செய்திகளை மட்டும் தருபனவாக அமைந்துவிடாது போராட்டத்தில் இக்கட்டான நிலைமைகளில் அவசிய தகவல்களையும் தந்து அன்றாடச் சம்பவங்களின் போக்குகளையும் மாற்றி அமைக்க உதவியுள்ளதை நாம் காணக் கூடியதாக உள்ளது. உதாரணமாக பல இடங்களில் அரச துருப்புக்களின் நடமாட்டங்களை அறிந்திராத மக்களும், அவர்களது மாணவ தலைவர்களும் பி.பி.சி. ஒலிபரப்புக்களை நேரத்துக்கு நேரம் தவற விடாது கேட்டுக் கொண்டதால் துருப்பினரை சதுக்கத்தினுள்ளே வரவிடாதவாறு தேவையான இடங்களிலெல்லாம் தடைகளை எழுப்பியும் மக்களைத் திரளாக அனுப்பியும் தடுத்துக் கொள்ள முடிந்தது. துருப்பினரின் நடவடிக்கைகளை ஸ்தம்பிதம் அடைய வைக்கவும் முடிந்தது. இங்கே சீன அரசின் தரப்பினை சார்ந்து நோக்கின் அவர்கள் ஏன் எமது செய்தி ஸ்தாபனங்களின் மீது அவநம்பிக்கையையும் சமயங்களில் வெறுப்பினையும் காட்டுகிறார்கள் என்பது உணரக் கூடியதாக உள்ளது."

இவ்வாறு மேற்கு நாடுகளினது செய்தித் தாபனங்கள் மீது அவ்வப்போது காழ்ப்புணர்வினை எமது தலைவர்களும் மக்களில் பலரும் கொண்டிருக்கும் அதே வேளை, மிகவும் முரண்பாட்டுண்மையான (Paradox) எதிர்பார்ப்புக்களையும் அவைமீது அவர்கள் கொண்டுள்ளனர்.

## அமைச்சர் சிதம்பரமும் TIME செய்தியும்.

எமது மக்களிடையே நடத்தும் பிரச்சாரங்களுக்காக மேற்கு நாடுகளில் வெளியாகும் செய்திக் குறிப்புக்களை அவற்றின் வசனங்களுக்கிடையே அமையும் சுத்தியற்ற நோக்கங்களை புரிந்து கொள்ளாது சேர்த்துக் கோர்த்துக் கொண்டிழுப்பதும் பின்னர் அதே ஊடகங்கள் தமக்கு எதிரான கருத்துக்களை தருணம் பார்த்து முன் வைக்கும் போது மனதுக்குள்ளே புகைந்தவாறு ஏதாவது சாக்குப் போக்கு கூறிய பின்னரும் அவற்றிலேயே தங்கியிருந்து விடுவதை நாம் அனுபவரீதியாக கண்டு கொண்ட உதாரணமாக இங்கே காட்டலாம்.

முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் திரு.ப.சிதம்பரம் இந்திய பாகிஸ்தான் உறவின் நிலைபற்றி செவ்வி ஒன்றில் வியாபிக்கும் வழியே இந்தியாவை "வளரும் வல்லரசு" என அமெரிக்க Time பத்திரிகை கூறியுள்ளதை சுட்டிக்காட்டி ஏதோ பெரும் தேர்ச்சிக் கடதாசி (Certificate) கிடைத்தது போல் ஆரவாரித்துள்ளனர் என்றால் இவ்விடயம் வெறும் குழந்தைப் பிள்ளைத்தனம் என தட்டிக்கழித்து விடமுடியாது. அது எமது மக்களில் பலர் இச்செய்தித் தாபனங்களிடம் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப் பதையும் விட மேலாக,அவற்றின் அதிகார பீட நிலையை உணர்ந்து ஏற்றுக் கொண்டுள்ளதையுமே எமக்கு உணர்த்துகிறது.

## இங்கிலாந்தில் வெளிவரும் பத்திரிகைகளும் அவற்றின் தன்மைகளும்.

இங்கிலாந்தில் 11 தினசரிகளும் அவற்றின் ஞாயிற்றுப்பதிப்புகளும் கூடவே ஞாயிறுகளில் மட்டுமென 2 சஞ்சிகைகளும் வெளியாகின்றன. இவற்றில் இரண்டினைத்தவிர மற்றவையாவுமே ஆளும்கட்சியான கொன்சவேற்றிவ் கட்சிக்கும் (Conservative Party) இனுடைய ஆதரவாளர்களுக்கு சொந்தமானவை. குறிப்பிட்ட இரண்டு பத்திரிகைகளும் எதிர்க்கட்சியான தொழிற் கட்சிக்கும் (Labour Party) க்கு அவ்வப்போது நிலமைகள் குறித்து அது எடுத்துக்கொள்ளும் நிலைப்பாடுகளை பொறுத்து ஆதரவு வழங்குகின்றன. அவை எந்தக் கட்சியைத்தான் உள்நாட்டு அரசியலில் ஆதரித்தாலும் வெளிநாட்டு அரசியலைப் பொறுத்தவரை ஒருமுகப்பட்ட கருத்தைக் கொண்டு ஆனால் பலவித வர்ணங்கள், சோடனை களுடன் தத்தமது வாசகர்களுக்கு ஏற்றவாறு தருகின்றன. இவற்றுள் The Times, The Daily Telegraph, The Guardian, The Independant என்பவை தரமானவையாகக் கருதப்படு கின்றன. இதன் அர்த்தம் மத்தியதர வர்க்கத்தினது வாசகப் பொருட்கள் என்பது மட்டுமன்றி இவை கிசுகிசுக்களை மையமாகக் கொண்டு அமையாத பத்திரிகைகள் என்பதுமாகும். ஏனெனில் மற்றவை வெறும் சாதாரண கிசுகிசு விலிருந்து சகிக்கூ முடியாத அருவருப்பான (அழகானதெனக்கூட வர்ணிக்கமுடியாத) விகாரங்கள் வரை தம்மை ஒழுங்கு செய் துள்ளன.

"நாமே இந் நாட்டை ஆளுகின் றோம்" என்ற தொனிப்பில் வாழ்வோர்களது பத்திரிகை Times ஆகும். அதாவது இது இவ்விட ஆளும் வர்க்கங்களினது நிறுவனங்களினுடைய பிரதிபலிப் பாகும். இன்னொரு வழியில் கூறினால் இப் பத்திரிகை முதலாளித்துவ ஏகாதிபத்தியத்திற்கு தங்க முலாம் பூசி அல்லது மனித நேயம் (Humanity), சுதந்திர வேட்கை (Freedom) என்பவற்றால் சோடனை செய்து தனது வாசகர் களுக்கு மனச்சாந்தியைத் தருகின்றது.

Daily Telegraph இவ்வளவு தூரம் தன்னை மாற்றிக் கொள்ள விரும்பாது "இந்நாட்டை ஆள்பவர் கள் யாராயினும் உண்மையான அதிகாரம் எம்மிடம் தான்" என்ற பாணியில் மனத்தடங்கல்கள் இல்லாது முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் முன்னணி போராளியாக (Champion) காட்டிக்கொள்கிறது. பழைய சாம்ராச்சியத்தினை அன்றாடம் நினைவுகூர்ந்து பெருமைப்பட்டுக் கொள்கிறது. இதற்கே மற்றப் பத்திரிகைகளுக்கு கிடைக்க முடியாத பிரத்தியேகமான தகவல்கள் (Exclusives) இந்நாட்டு உளவு ஸ்தாபனங்களால் அவ்வப்போது வழங்கப் படுகின்றன. Guardian இந்நாட்டு மிதவாத பாரம்பரியம் தனை (Liberal tradition) பிரதிபலி க்கிறது. உலகப்புகழ் பெற்ற எழுத்தாளரான ஜோர்ச் ஒவெல் (George Orwell) என்பவரால் தொடங்கப்பட்ட இப்பத்திரிகை "இந்நாட்டை ஆள நாமே தார்மீக உரிமை கொண்டவர்கள்" என்ற தொனிப்பில் இன்றும் வெளிவருகிறது. அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட Independent பத்திரிகையானது, Times க்கும் Guardian க்கும் இடையே எங்கே என நிச்சயிக்க முடியாது தத்தளிக்கிறது.

Guardian, Independent ஆகிய இரண்டினையும் தவிர மற்றவையாவும் (ஞாயிறு பதிப்புகள் உட்பட) பல் தேசிய நிறுவனங்களுக்கு (Multi National) சொந்தமானவை ஆகும். இவற்றுள் மேற்கு நாடுகளிலும் இன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற ஊடகங்களை விலைக்கு வாங்குதலில் போட்டியிட்ட வண்ணம் உள்ள அவுஸ்திரே லியாவைச் சேர்ந்த ருப்பேட் மேடாக் (Rupert Murdoc) என்பவரதும் செக்கோசிலாவாக்கியாவில் பிறந்து இங்கிலாந்தில் வாழும் றொபேட் மக்ஸ்வெல் (Robert Maxwell) என்பவரதும் தாபனங்கள் தனியார் (Private) செய்தித் தாபனங்களின் செய்திப் போக்குவரத்தில் 60% க்கு மேற்பட்டதை தம்வசம் கொண்டுள்ளனர்.

## இலங்கை நிலவரம் பற்றி இங்கிலாந்து செய்தித்தாள்கள்.

இங்கிலாந்தின் செய்தித் தாபனங்கள் எவ்வாறு எமது போராட்டத்தை கையாள்கின்றன என்பதை சிறிது ஆழமாக கவனித்தால் அவர்கள் எவ்வாறு தமது காரியங்களை எங்கெங்கும் சாதிக்க முனைகிறார்கள் என்பது புரியும். இங்கே, இவர்கள் தரும் தகவல்கள் சரியானவையா? என்ற வாதங்களை ஒருபுறம் கொண்டும் அவற்றினை எவ்வகையில் எக்கால கட்டங்களில் தருகிறார்கள் என்பதையும் கவனித்தல் அவசியம்.

1983 ஜூலை இனப்படு கொலைகளின் போது சற்று

மனிதாபிமானத்திற்கு கூடுதலாகவே கவனம் கொடுத்துவிட்ட மேற்கத்திய பத்திரிகைகள் போலவே இங்கிலாந்திலும் பத்திரிகைகள் நடந்து கொண்டபோதிலும் காலப்போக்கில் எமது பிராந்திய அரசியல், உலக முதலாளித்துவத்தின் அபிலாசைகள் எதிர்பார்ப்புகளை தாமாகவே உணர்ந்துகொண்டு தம்மை நெறிப்படுத்திக் கொண்டார்கள். இலங்கைப் பிரச்சனைகளில் இந்தியாவினது தலையீடு தடுக்கப்பட முடியாதது என்பதை ஊகித்துக் கொண்டு, அதன் தலையீட்டினை தவிர்த்துக் கொள்ளும் வகையிலும், முடியாத வேளையில் தலையீட்டின் பிரகாரம் இந்தியாவினது வெற்றியோ, தோல்வியோ அதற்கு உலகளவில் வளர்ந்துவரும் அதிகாரச் செல்வாக்கை மழுங்கடிக்கக் கூடியதாகவும் அமைய இவைகளது எழுத்துக்கள் அத்திவாரங்களாகின.

நிலமைகள் இவ்வாறு எமக்கு எதிராகத் திரும்பும் வேளையில் எமது மக்களது பிரச்சார முயற்சிகள் மழுங்கடிக்கப்படும் வகையில் நடந்துகொண்டன எமது இயக்கங்கள். பல காலமாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், கனவான்களைக்கண்டு பேசிவந்த பல அனுபவம் கொண்ட ஈழப் போராட்ட ஆதரவாளர்கள் இயக்கங்களினால் நெருக்கடி செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டார்கள். அவர்கள் நடாத்திவந்த பல அமைப்புகளையும் இவை தம்வசமாக்கிக் கொண்டன. இந்நாட்டில் மேலிடத்தில் இருப்பவர்களுக்கும், எமக்கு மிடையே இருந்த தொடர்புகள் சமூக சம்பிரதாயங்களை இழந்து வெறும் வியாபாரமாக மாற்றப் பட்டது. இவற்றினை பத்திரிகைகளும் பிரதிபலித்தன என்றால் மிகையாகாது.

## போராட்டத்தை கொச்சைப்படுத்தும் பிரச்சாரங்கள்

"தமிழ்மக்களது உரிமைகள் என்ற" அடிப்படையையும் கவனத்தில் கொண்டு தகவல்கள், செய்திகள், கட்டுரைகள் வழங்கிவந்த பத்திரிகைகள் கூட சிறிதுசிறிதாக சம்பவங்களை மட்டுமே அறிவித்து அதற்கும் இருபக்க சார்பு விளக்கங்களைத் தந்து, "நடுநிலை" என்ற போலிக் கோட்டை நோக்கி நகரத் தொடங்கின. காலப் போக்கில் இவற்றில் கூட அக்கறை இல்லாது வெறும் பரபரப்பூட்டும் வகையில் அதற்கேற்ற செய்திகளை மட்டும் வழங்கியவண்ணம் இருந்தன. அதேவேளை, தமிழ்மக்களது போராட்டத்தின் தார்மீகத் தன்மையினை சிறிதுசிறிதாக தீர்த்துக் கட்டவும் தவறிவிடவில்லை. இவர்களது யுக்திகளுக்கு தம்மை அறியாமலேயே காரியங்களையாற்றி உடந்தைகளாக அமைந்தன இயக்கங்களின் நடத்தைகள். எனவே ஈழப் போராட்டம் ஒரு இன மக்களது ஜனநாயக உரிமைகள், உடமைகளது மீட்பிற்கான போராட்டமாக இருந்ததுபோய், இயக்கங்களிடையே உள்ள வலியவர்களின் சண்டித்தனமாகவும்

# திண்ணைப் பேச்சு

— சந்திர ஆரியர் —

## இலண்டன் குறிப்புக்கள்

### இலண்டனில் இவர்கள்...?

சில மாதங்களுக்கு முன்னர்அரசியல் கூட்டம் ஒன்று இலண்டனில் நடைபெற இருந்தது. சோசலிசத்தில் மிகவும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட சிலர் புகைவண்டியால் இறங்கி கூட்டம் நடைபெறும் இடத்தை நோக்கி செல்கிறார்கள். தமிழ் கடிகாரத்தின் படி தாமதமாகிவிட்ட அவர்கள் சற்று விரைவாகவே நடக்கத்தொடங்கினர். கதைச் சுவாரசியத்தில் இவர்கள் நடந்து கொண்டு இருந்தாலும் இடையிடையே தம்மோடு கூட வந்தவர்களும் பின் தொடர்கிறார்களா என்பதை திரும்பிப் பார்த்துக்கொண்டே வந்தனர்.

முன்னால் நடந்து கொண்டு இருந்தவர்கள் தற்செயலாக வீடு விற்பனை செய்யும் ஏஜன்டுகளின் அலுவலகத்தை கண்டுவிட்டனர். இதனால் நிலைகுலைந்து தடுமாறிப்போயினர். அவர்களின் சுட்டு விரல்கள் அலுவலக கண்ணாடி சுவர்களை குத்தியபடி நிற்க, அவ்விடத்தில் நின்றபடியே ஆரவாரம் செய்தனர். மாலை நேரம் 7.30 என இவர்களது கடிகாரம் காட்டிய அந்தக் கணத்தில் வந்த நோக்கத்தை மறந்தவர்களாக வீட்டு விலையில் விவாதத்தைத் தொடங்கினர்.

### எரிச்சல்-பொறாமை.

14.07.90 இல் திருவாளர்கள் அமிர்-யோகேஸ் நினைவு தினத்தின் போது ஆங்கிலேயப் பாதிரியார் ஒருவர் தனக்கு அரசியல் அறிவு அதிலும் ஈழத்தமிழரது அரசியல் எள்ளளவுக்கும் தெரியாது எனவும், ஆயினும் எம்மிடையே மலிந்து போய் விட்ட அரசியல் படுகொலைகளுக்கான காரணிகள் சிலவற்றை இங்குள்ள தமிழ் சமூகத்தினூடாக அனுபவத்தினால் ஊகித்து, உணர்ந்து உள்ளதாகவும் கூறி, அவைதான் தமிழரது "பேர் எரிச்சலும், சுயஇச்சையும்" எனத் தெரிவித்தார். இதனை ஊர்ஜிதம் செய்வதற்காக தனக்கும், இந்நாட்டு உள்துறை அமைச்சருக்கும் இடையில் இடம் பெற்ற சிறு கலந்துரையாடலை முன்வைத்தார். தான் அமைச்சரைச் சந்தித்து ஏன் தமிழரது வீடுகளுக்கு குடிவரவு, குடியகல்வு (Immigration) பொலிசாரை அனுப்பித் தொந்தரவு தருகிறீர்கள் என்று கேட்டதற்கு....

அமைச்சர்- " Father! நாங்களாகவே இதுவரை தமிழரது குடியேற்றம் பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிசாரை வீடு வீடாக அனுப்பவுமில்லை. அப்படி பொலிஸ் அனுப்பப்பட்ட இடங்களின் விபரங்கள் யாவுமே தமிழ்

அல்லது கொடூரம் கொண்ட சத்திரியக் குழுக்களிற்கிடையேயான சராசரிப் போராகவும் காண்பிக்கப்பட்டன. இச் சித்தரிப்பின் அடிப்படை உள்ளடக்கம் மாறாது போயினும், இந்தியாவின் நேரடித் தலையீடு தலைபங்கங்களை ஆயினும் சிறிது மாற்றவைத்தது. இவர்களைப் பொறுத்தவரை சிறிலங்காவிற்கு எதிராக நியாயமற்ற போரை நடாத்திவந்த புலிகள், இந்தியாவிற்கு எதிரான நியாயமான போரை நடத்தத் தொடங்கினர். ஆனால் இவ் வேளையிலும் புலிகளை கொடூரமான கொலைசெய்யும் போராளிகளாக அல்லது வீரம் கொண்ட கொலைகாரர்களாக காட்டினார்களே அன்றி தார்மீகத்தின் பக்கம் நிற்பதாகவோ, அல்லது தமிழ்மக்களது நியாயமான உரிமைகளை பிரதிபலிப்பவர்கள் ஆகவோ, ஏன் தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சனை இருப்பதாகவோ இவர்கள் எழுதிக்கொள்ளவில்லை.

இந்தியாவின் நேரடிப்பிரவேசம் தொடக்கம், வெளியேற்றம்வரை இந்தியாவை மோடர்களாகவும் காரியமாற்றும் தகுதியோ ஆற்றலோ அற்றவர்களாகவும் புலிகளை ஒருவித கொலைகாரக் கிரோக்களாகவும் கற்பித்த பத்திரிகைகள், காலத்தின் பிரகாரம் தம்மை மாற்றிக்கொள்ளத் தவறவில்லை. புலிகள் பழையபடி வில்லன்களானார்கள், அறிவோ ஆற்றலோ அற்ற துப்பாக்கி சுடும் வீரர்களானார்கள். இவ்வகைச் சித்தரிப்பின் உச்சத்திற்கே சென்றுள்ளது The Times பத்திரிகையில் சமீபத்தில் வெளியானதொரு கட்டுரை. சிறிலங்கா-புலிகள் போர் மீண்டும் மூண்டுள்ள இவ்வேளையில் 21.6.90 அம்பாறையிலிருந்து திரு. ஜேம்ஸ் பிறிங்கிள் (James Pringle) என்பவரால் எழுதப்பட்ட இக் கட்டுரையின் சில பகுதிகளை சாரமாக மொழியாக்கம் செய்து தருவதினூடாக இதனைப் புரிந்து கொள்ளலாம்.

*"புலிகளின் தலைவன் பிரபாகரன் நெப்போலியனது ஒரு விசிறி. இந்தியப்படங்களில் வரும் பருத்த கதாநாயகர்களைப் போல காட்சியளிக்கும் இவரை உலகத்தின் ஒரு சில சமூகங்களினாலேயே மாதிரிப் புருசனாக(Role Model) ஏற்றுக்கொள்ளமுடியும். ஏனெனில் மற்றெல்லாக் காரணங்களிலும் பார்க்க இவர் ஒரு பயங்கர, குரூரமான கொலைகாரன் என்ற விடயமே போதும்.*

*ஈர்ப்புச் சக்திமிக்க இவர் மீன்பிடிச் சமூகத்தைச் சார்ந்தவர். இச் சமூகத்திற்கு பாரம்பரியமாக கடத்தல், கடற்கொள்ளை போன்றவற்றில் ஈடுபாடு உண்டு. பலவிதமாக அழைக்கப்படும் இவர் உண்மையில் அல் கப்போன் (Al Capone) எனும் அமெரிக்க மாபியாMafia தலைவனுக்கும், ரொபின் கூட் (Robin Hood)*

சமூகத்தினிடையே இருந்து வந்த பெட்டிசங்களிலேயே கிடைக்கப் பெற்றோம். அவை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமையுமே. Father உங்களுக்குத் தெரியாமலென்ன? இலங்கைத் தமிழர்கள் பேரெரிச்சல் கொண்டவர்கள். அயலவர்கள் முன்னேறுவது அவர்களுக்கு பொறுக்க முடியாத விடயம். அவர்கள் அப்படியான ஒரு இனம்." என்று கூறியதாகச் சொன்னார்.

## சுருக்குப் போடும் சமூகம்

அண்மையில் தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றினை தயாரித்து வழங்கிய சோவியத் எழுத்தாளர் விற்றாலியேவ் (Vitaly Vitaliave) பல நாடுகளுக்குத் தான் பயணம் செய்திருப்பதாகவும், ஆனால் இவ் இடத்தில் மட்டுமே ரைகளுக்கும் (Tie) ஆண்களுக்கும் இடையேயுள்ள இறுக்கமான உறவைக் காணக் கூடியதாக உள்ளது எனவும் அவர் கூறினார். உண்மையில் ஆங்கிலேயரிலும் பார்க்க எம்மவரே ரைகள் மீது அதிக ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர். இன்று ரைகளில்லாது தமிழர்கள் சமூகம் தரும் நிகழ்ச்சிகள் மிகவும் அரிதானவையே. கல்யாணங்கள், மரணச் சடங்குகள், மனோரம்மிய நிகழ்ச்சிகள், கோவில்கள்...... எங்குமே ஒரே ரை அணிந்த ஆண்கள் மயம்.

## சரித்திரம் அழிந்துபோகாதிருக்க..!

இலண்டனிலுள்ள ஒரு மன்றத்தினால் சில மாதங்களின் முன்னர் மிக முக்கியமான நிகழ்ச்சி ஒன்று நடாத்தப் பட்டது. அதனது நோக்கம் சாதாரண நபர்கள் மாதம் ஒருமுறை பத்து நிமிட நேரம் பேசும் ஈழப் போராட்டம் பற்றியதோ அல்லது மாதமொரு தடவை ஒரு கணம் சிந்திக்கும் மக்களது அவலநிலை பற்றியதோ அல்ல.

விடயம் மிகவும் சீரியஸ் ஆனது. அது மக்கள் சரித்திரம் பற்றியது. இவர்களின் அவதானிப்பின்படி எமது சரித்திரத்தை நாமே அறிந்து கொள்ள முடியாமல் போகக் கூடிய காலம் உருவாகிறது. ஏனெனில் சான்றுகளும், தஸ்தாவேஜுகளும் பெரியோர்களும் மறைந்து கொண்டே போகும் நிலைமை.

எனவேதான் அந்தக் கூட்டத்துக்கு இவர்களது முயற்சிகளின்படி அன்று பல முக்கிய கனவான்களும் அவர்களது பிள்ளைகளும் வரவழைக்கப் பட்டிருந்தினர். அப்படி வந்து சேர்ந்தவர்களது குடும்ப வம்சங்களை (Family Tree) ஊரில் இருந்து மேலும் வரவழைத்துக் கொள்வதன் மூலம் எமது மக்களது சரித்திரத்தை ஆவணம் செய்து விடலாம் என விவாதம் நடந்தது. அதுவே அன்றைய நிகழ்ச்சியின் ஏகமனதான தீர்ப்பானது. ●

எனும் ஆங்கில கீரோவிற்கும் இடையிலான கலப்பு என்றே வர்ணிக்க முடியும். துப்பாக்கியிலேயே தங்கியிருக்கும் இவருக்கு அரசியலில் நம்பிக்கையில்லை. அதே வேளை, அரசியல் கலந்துரையாடல்களில் பங்குபற்றும் போது சௌகரியம் ஆகவும் இல்லாது காணப்படுகின்றார். இவர் தலைமையிலான புலிகளினது குரூரத்திற்கு அபு நிடாலின் (Abu Nidal) பாலஸ்தீன பயங்கரவாதக் குழு ஒன்றே உலகில் நிகர்.

கொடூரமான படுகொலைகள் செய்வதை தமது இன்றைய அதிகார நிலைக்கு கொண்டு வருவதற்கு ஒரு வழியாக இவர் கருதிச் செயற்படுகிறார். இவ்வழியில் சிங்களவர்களே அதிகம் பலியாகியுள்ளார்கள். இன்று இவர்களது தோல்விகளையே இவர்களது மக்கள் வரவேற்கத் தொடங்கியுள்ளார்கள். பலர் புலிகள் தம் இடம் விட்டகன்று தம்மை அமைதியுடன் வாழவிடுமாறு வேண்டிக் கொள்கிறார்கள். சிறீலங்கா இம்முறை போர் செய்வதை விரும்பவில்லை. அரசியல் தீர்வு ஒன்றைத் தேடி அதிகாரப் பரவலாக்கம் பற்றி இணக்கம் கண்டு வரும் வேளையிலேயே இப் போர் புலிகளால் ஏன் தொடங்கப்பட்டுள்ளது என அரசிற்கு விளங்கமுடியாதுள்ளது. ஆயினும் இம் முறை புலிகள் தம்மை மிஞ்சிய கருமத்தில் கையை வைத்து விட்டார்கள்".

இவ்வாறு எழுதியுள்ள Times பத்திரிகை நிருபரது மனோவியல், உள்ளர்த்தம் சரியாகப் புரிய முடியாத போதினும், என்றும் இல்லாதவாறு எழுதப்பட்ட கட்டுரையை வெளியீடு செய்துள்ள Times பத்திரிகையின் உள்நோக்கங்கள் ஊகிக்க முடியாதவையல்ல. நாம் மேலே குறிப்பிட்டது போலவே முதலாளித்துவ நாடுகளின் செய்தித் தாபனங்கள் அவ்வப்போது தமக்கு ஏற்ற வகையில் எம்மை வகைப் படுத்திக் கொள்ள எடுத்துக் கொள்ளும் பிரச்சார நடவடிக்கைகளில் இச் சிறு முயற்சியும் ஒன்று. என்பதையும் அவை சுயமாகவே மேலிடக் கண்காணிப்புகள் தணிக்கைகள் இல்லாமலே பொறுப்புணர்ந்து காரியமாற்றுவதையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். ●

## பெண்கள் சந்திப்பு:

கடந்த 17.3.1990 அன்று மேற்கு ஜேர்மனியிலுள்ள கேர்ண (Herne) நகரில் தமிழ் பெண்களின் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றபோது தீர்மானிக்கப் பட்டதன்படி மூன்றாவது சந்திப்பு எதிர்வரும் 1.9.1990 அன்று பின்வரும் முகவரியில் நடைபெறவுள்ளது.

EV.GEMEINDE HAUS
HEINRICHBOELL STR 258
5600 WUPPERTAL - 02
WEST GERMANY

இச் சந்திப்பில் பங்குபற்ற விரும்புவோர் தமது பெயர், முகவரி போன்ற விபரங்களை எழுதி, இச் சந்திப்பிற்கான பதிவுக்கட்டணமாக 5 DM இனைச் செலுத்தி 20.8.90 இற்கு முன்னதாக கீழுள்ள முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கூட்ட அமைப்பாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

FRAUEN TREFFEN
HAGENER STR 55
5600 WUPPERTAL-02

<u>நிகழ்ச்சி நிரல்:</u>

| | |
|---|---|
| 10.00 - 10.15: | சுய அறிமுகம். |
| 10.15 - 10.30: | தேநீர் இடைவேளை. |
| 10.30 - 11.30: | "பெண்கள் எவ்விதம் அடக்கப் படுகிறார்கள் ?" (விரும்பியோர் தாம் கேட்ட அல்லது கண்ட அனுபவங்களைக் கூறலாம்.) |
| 11.30 - 13.00: | "பெண்ணிலைவாதம் என்றால் என்ன?" (கட்டுரை வாசித்தல், கலந்துரையாடல்) |
| 13.00 - 14.00: | மதிய போசன இடைவேளை. |
| 14.00 - 14.30: | கலை நிகழ்ச்சிகள். |
| 14.30 - 15.30: | எதிர்கால ஆலோசனைகள். |
| 15.30 - 16.00: | அடுத்த சந்திப்பு பற்றிய தீர்மானம். |

## வடகிழக்கு முழுவதும் 7 இலட்சம் அகதிகள்!

கடந்த யூன் மாதம் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே ஆரம்பித்த யுத்தத்தின் விளைவாக இதுவரை ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக ஈழத்தின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

யாழ் குடா நாட்டில் பலாலி, யாழ் கோட்டை முகாம்களைச் சுற்றியுள்ள பல பகுதிகளைச் சேர்ந்த சுமார் மூன்று இலட்சம் மக்கள் தமது பாதுகாப்பு கருதி இருப்பிடங்களை விட்டு வெளியேறி நகரின் மத்திய பகுதியில் பல பொது இடங்களில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களைவிட திருகோணமலை வன்னி போன்ற பகுதிகளிலிருந்தும் மக்கள் அகதிகளாக யாழ் குடாநாட்டினுள் சேர்ந்துள்ளமையினால் யாழ் நகரினுள் மேலும் அகதிகள் தொகை கூடியுள்ளது. யாழ்ப்பாணத்தில் இன்று கடற் பரப்பினால் பிரிக்கப்பட்ட தீவுப் பகுதிகளில் வாழும் மக்கள் கடந்த 2 மாதங்களாக மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

வன்னியின் எல்லைப் புறங்களில் பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டு வருவதனால் எல்லைக் கிராமங்களான செட்டிக் குளம், 8 ம் கட்டை, தவசிக் குளம், தோணிக்கல், மாங்குளம், மாறம்பைக் குளம், சாத்திரி கூழாங் குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் தமது உடமைகளை அரைகுறை விலைக்கு விற்று (பவுண் 1000 ரூபா-500 ரூபா வரையும், மோட்டார் சயிக்கிள் 3000 ரூபா வரையும்) சேரும் பணத்துடன் மன்னார் கரையை நோக்கிச் செல்கின்றனர். இந்தியாவுக்கு செல்வதற்கான படகுச் செலவுக்காகவே அரைகுறை விலைக்கு விற்று செல்கின்றனர்.

திருகோணமலையிலிருந்து முல்லைத் தீவினூடாகவும், வவுனியாவில் இருந்தும் வந்த மக்களில் 30 ஆயிரம் பேர் மன்னாரின் பேசாலை, விடத்தல்தீவு கடற் கரைப் பகுதிகளை வந்தடைந்துள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் கோமாரி, பொத்துவில் முகாம்களில் 50,000 பேர் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த 25,000 முஸ்லிம் மக்கள் கொறவப்பொத்தான, அனுராதபுரம், மதவாச்சி போன்ற சிங்களப் பகுதிகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

பொதுவாக மேற்படி முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் உணவு, மருத்துவ தட்டுப்பாட்டுடன், இட நெருக்கடி, மலசல கூட வசதியின்மை ஆகியவற்றால் வயிற்றோட்டம் போன்ற தொற்றுவியாதிகளினால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். பெரும்பாலும் சிறுவர்கள் உட்பட 15 இற்கும் மேற்பட்டவர்கள் வயிற்றோட்டம் காரணமாக மரணமடைந்துள்ளனர். கொழும்பு மாணிக்கப் பிள்ளையார். கோவிலில் இருந்து 5 பேர் தொற்று நோய் காரணமாக மரண மடைந்தது குறிப்பிடத் தக்கது.

இவற்றைவிட மொனராகலை, குமாரவத்தை தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர் குடும்பங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகி அங்குள்ள பாடசாலை ஒன்றில் தஞ்சம் புகுந்துள்ளனர். தங்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கும் வரை தாம் தோட்டத்திற்கு செல்லமுடியாது எனத் தெரிவித்து தொடர்ந்தும் பாடசாலையிலேயே தங்கியுள்ளனர். ●

## தமிழகம் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.

இதுவரை தமிழகத்தை சென்றடைந்துள்ள 60,000 அகதிகளுடன் மேலும் நாளுக்கு நாள் தமிழகம் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. வவுனியாவில் இருந்து அகதிகளாகப் புறப்பட்ட நாலு குடும்பங்களை சேர்ந்த 35 பேர் படகு கவிழ்ந்ததின் காரணமாக மன்னார் கடற்பகுதியில் மரண மடைந்த சம்பவம், இலங்கைக் கடற்படையின் துப்பாக்கி பிரயோகங்கள் ஆகியவற்றிற்கு மத்தியிலும் மக்கள் இந்தியாவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர்.

மேற்படி அகதிகளின் வருகையால் மண்டபம், திருச்சி கொட்டப் பட்டு முகாம்கள் நிரம்பியுள்ளமையினால் சேலம், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், சிதம்பரனார் மாவட்டங்களுக்கு மேலதிக அகதிகளை அனுப்ப தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு அகதிகள் தொடர்ந்து வருவதனால் பல்வேறு சமூகப் பிரச்சனைகளுடன் சமூகப் பதட்ட நிலைக்கும் இடம் ஏற்படும் என முதல்வர் கருணாநிதி கடிதமூலம் வி.பி.சிங்கிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழத்தில் நடைபெற்று வரும் இனப்படுகொலையை கண்டித்து தமிழக முதல்வர் மு.கருணாநிதி ஒழுங்கு செய்திருந்த ஒரு நாள் கர்த்தால் தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் கடந்த 20.7.90 அன்று நடைபெற்றது. இக் கர்த்தாலுக்கு தமிழ்நாட்டின் ஏனைய எதிர் கட்சிகளும் ஆதரவு கொடுத்திருந்தன. ●

## காத்தான்குடி பள்ளிவாசலில் முஸ்லிம்கள் மீது துப்பாக்கிச் சூடு!. 165 பேர் இதுவரை பலி

காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது ஆயுதம் தாங்கிய நபர்கள் சுமார் 15 நிமிட நேரம் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் 165 முஸ்லிம் மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். கொல்லப் பட்டவர்களில் 5 ஹஜ்ஜாஜிகள், பள்ளிவாசல் தலைமை கர்த்தா ஒருவர், 10 குழந்தைகள், 12 ஆசிரியர்கள், 4 பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட 165 பேர் இறந்துள்ளனர். இவர்களின் இறுதிக் கிரியைகளில் 40,000 முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டதுடன் முஸ்லிம் கிராமங்கள் தோறும் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

இச் சம்பவத்தை அடுத்து கலவரத்திற்குரிய பதட்ட நிலை தோன்றியுள்ளதால் அப்பகுதியில் தமிழ் மக்களின் நடமாட்டம் குறைந்ததுடன் நாவற்குடா, மஞ்சத்தொடுவாய், ஆரையம்பதி ஆகிய கிராமங்களில் வசிப்பவர்கள் மட்டுநகருக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இப் படுகொலையின் எதிரொலியாக கொழும்பிலும் சில பகுதிகளில் பதட்டம் காணப்பட்டதுடன், கொள்ளுப்பிட்டி இந்து ஆலயம் முஸ்லிம்களால் தாக்கப் பட்டும், மூவர் வெட்டியும் கொல்லப் பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பள்ளிவாசலில் யூலை மாத இறுதியில் நடந்த துப்பாக்கி பிரயோகத்தில் 6 முஸ்லிம்கள் கொல்லப் பட்டுள்ளனர். இதில் மூவர் ஊர்காவல் படையினராவர். இதே போல மதவாச்சியில் அகதிகளாக வந்த 5 முஸ்லிம் மக்கள் கொல்லப் பட்டுள்ளனர் ●

## சிங்கள கிராமவாசிகளும் படுகொலை!!.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள "பக்கியெல்ல" என்ற சிங்கள கிராமவாசிகள் 50 பேர் வயலில் அறுவடை செய்துகொண்டிருந்த வேளை இனந்தெரியாதோரால் தாக்கப் பட்டபோது இருவர் கொல்லப் பட்டதுடன் நூறு ஏக்கர் வயலும் எரிக்கப் பட்டுள்ளது. இதே போல மதவாச்சியிலுள்ள எலவக்க எனும் கிராமத்தில் அக் கிராம வாசிகள் 22 பேர் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்யப்பட்டுள்ளனர். இக் கொலைகள் நடைபெற்ற இடத்தில் "கறுப்பு திராவிட இயக்கம் 1983" என மூன்று மொழிகளில் எழுதப் பட்ட துண்டுப் பிரசுரங்கள் காணப் பட்டன.

கிழக்கு மாகாணத்தின் எல்லைக் கிராமமான கம்மின்ன எனும் சிங்களக் கிராமத்தின் மீதும் இவ்வாறு இரவு நேரத்தில் ஆயுதம் தாங்கிய நபர்கள் புகுந்து நித்திரையிலிருந்த மக்களை சுட்டுக் கொன்றுள்ளனர். ●

## சிதறல்கள்...

*வட கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தத்தை அடுத்து அங்கு இராணுவ பலத்தை அதிகரித்து முழுமையான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் வகையில் நாட்டில் உள்ள ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் அத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் இராணுவத்திற்கு தலா 20 பேர் வீதம் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டுமென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதன் மூலம் இலங்கை இராணுவத்தில் 4000 பேர் மேலதிகமாக சேர்க்கப் படுவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

*மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உட்பட்ட மெதவத்தை, பின்வத்தை, கெமுனுபுர, புலுதுணாவ, நியகுண, தீகவாவி, ஆகிய கிராமங்களை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அம்பாறை மாவட்டத்துடன் அரசு இணைத்துள்ளது.

*யாழ்ப்பாணம் சென்று திரும்பிக் கொண்டிருந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் (ICRC) வாகனம் ஆனையிறவு தடை முகாமை அண்மித்த போது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டுள்ளது. இதில் வாகன சாரதி காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் பற்றி விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் எதிரெதிராக குற்றம் சாட்டிய போதும் செஞ்சிலுவை சங்கத்தினர் இராணுவத் தரப்பிலிருந்தே தாக்குதல் நடந்ததாக கூறியுள்ளனர்.

*இந்திய இராணுவம் இலங்கையை விட்டு சென்ற பின்னர் பாகிஸ்தானைச் சேர்ந்த 4 கரையோரக் பாதுகாப்பு யுத்தக் கப்பல்கள்(எம்.எஸ்.எ) கொழும்புக்கு விஜயம் செய்துள்ளன. இக் கப்பல்கள் சீனாவில் கட்டப் பட்டவையாகும்.

*கிழக்கு மாகாண பாண்டிருப்பு கிராமத்தை சுற்றிவளைத்து தேடுதல் நடாத்திய விசேட அதிரடிப் பொலிசார் (STF) 100 இற்கு மேற்பட்ட இளைஞர்கள், மாணவர்களை கைதுசெய்து கல்முனை இராணுவ முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யக் கோரி பாண்டிருப்பை சேர்ந்த நூற்றுக்கணக்கான தாய்மார்கள் நடத்திய ஊர்வலத்தை அதிரடிப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

*பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணாவும், வாத்தக வாணிபத்துறை அமைச்சர் ஜனாப்.ஏ.ஆர்.மன்சூரும் சவூதி அரேபியாவிற்கு பயணமானார்கள். இவர்களுடன் இராணுவ கடற்படை அதிகாரிகளும் சென்றுள்ளனர். ●

**சுவிஸ் நாட்டில்**

# ஒரு ஜீவனின் மரணம்!

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சிவகுரு சாந்தகுமார் (ஜீவன்) எனப்படும் 25 வயது நிரம்பிய தமிழ் இளைஞர் சுவிற்சலாந்தில் சூரிச் மாநிலத்திலுள்ள ரீகன்ஸ் டோர்ப்ஸ் (Regens Dorf) எனும் இடத்தில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

யூலை மாதம் 21ந் திகதி அதிகாலையில் ஜீவன் தனது நண்பனுடன் மூவின் பிக் (Moeven Pick) உணவுச் சாலைக்கு முன் நின்று கொண்டிருக்கையில் சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த இரு பெண்களும் இரு ஆண்களும் அருகில் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தனர். இவ் வேளையில் உணவுச் சாலையினுள் இருந்து ஒரு சுவிஸ் இளைஞன் வெளியே வந்து உணவுச் சாலைக்கு முன்பாக சிறுநீர் கழித்தார். இதனைக் கண்ட அவ்விடத்தில் நின்ற சுவிஸ் வாசிகள் கேலித்தனமாக சிரித்தார்கள். இவர்களோடு ஜீவனும் அவரது நண்பனும் சிரித்தார்கள்.

கோபமடைந்த இவ்விளைஞன் தமிழன் என்ற சொல்லை அழுத்தமாகச் சொல்லி, துவேஷ வார்த்தைகளால் பேசி விட்டு தனது நண்பர்களிடம் சென்று விட்டான். சில நிமிடங்களின் பின், ஜீவனின் நண்பன் தொலைபேசியில் பேசுவதற்காக அவ்விடம் விட்டுச் சென்றபோது ஜீவனின் அபயச்சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கையில் சிறுநீர் கழித்த இளைஞன் ஜீவனை அடித்து மேற்சட்டையில் பிடித்துத் தூக்குவதைக் கண்டதும் அவ்விடம் நோக்கி விரைந்தான். அப்போது ஜீவன் பேசமுடியாத நிலையில் மூச்சு விடக் கஷ்டமான நிலையிலும் இருந்தார். ஜீவனுக்கு அடிவிழுவதைத் தடுக்கச் சென்ற நண்பனும் தாக்கப்பட்டார். நண்பன் சத்தமிட்டுச் சனத்தைக் கூட்டினார்.

நிலைமையை கண்ட உணவுச்சாலை உரிமையாளர் பொலிசுக்கும் மருத்துவ மனைக்கும் கொடுத்த தகவலை அடுத்து அவசர சிகிச்சைப் பிரிவுப் பொலிசாரும் ஸ்தலத்துக்கு விரைந்தனர். இருந்தும் ஜீவனுக்கு சுவாசப்பை செயற்பாடு குறைந்து விட்டதால் முதலுதவி செய்ய முடியவில்லை. இதனைத் தொடர்ந்து அவசரச் சிகிச்சைப் பிரிவிலிருந்து ஹெலிகொப்டர் வரவழைக்கப் பட்டு முதலுதவி செய்யப் பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். வைத்தியர்கள் பல முயற்சிகள் எடுத்தும் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜீவன் மரணமடைந்தார்.




சூரிச் மாவட்டத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்தின் போது..

இக்கொலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சூரிச் மாநகரில் மூன்று நாள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதமும் இறுதி நாளன்று (30.7.90) கண்டன ஊர்வலமும் நடைபெற்றது. ஊர்வலத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இதில் 400 பேர் வரையில் தமிழ் மக்களும் மீதி சுவிஸ் மக்களுமாவர்.

இவ் ஊர்வலத்தில் இனவாதத்துக்கும் வெளிநாட்டவர்களுக்கும் குறிப்பாக அகதிகளுக்கு எதிரான செயல்களைக் கண்டிக்கும் சுலோகங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. இத்தகைய சம்பவங்கள் இனியும் நடைபெறாதவாறு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் படி சூரிச் மாநகர ஆணையாளருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப் பட்டது. இவ் ஊர்வல உண்ணாவிரத ஏற்பாடுகளை சுவிஸ் நாட்டு இடதுசாரிகள் முன்னின்று செய்தனர்.

ஜீவனின் கொலைக்குக் காரணமான 39 வயதுடைய சுவிஸ் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ●

## விசாரணைக்கு முந்திய தீர்ப்பு.

மேற்கு ஜேர்மனி அன்ஸ்பாக் மாவட்ட நிர்வாக நீதியாசர் ஒருவர் சர்ச்சைக்குரிய ரீதியில் சட்டத்தைக் கையாண்டுள்ளது அறியப்பட்டுள்ளது. குர்திஸ்தான் அகதி ஒருவரின் அகதி அந்தஸ்து பெறுவதற்கான வழக்கு ஆரம்பமாவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் இவ் அகதியின் சட்டத்தரணி ருடோல்ப் றென்னர் வழக்கு பத்திரங்களைப் பார்வையிட்ட போது அவற்றுள் நீதிபதியின் தீர்ப்பும் நீதிமன்றக் கடிதத் தலைப்பில் எழுதிக் கையெழுத்திடப் பட்டுள்ளதை கண்டதும் ஆச்சரியமடைந்தார். குர்திஸ்தான் அகதி வழக்குச் செலவுகளைப் பொறுப்பேற்க வேண்டுமெனவும், அவருக்கு அகதி அந்தஸ்து கிடைக்கப் படமாட்டாது எனவும் இத் தீர்ப்பில் எழுதப்பட்டிருந்தது. ●

சிறுகதை

# தராசை நம்பி...

ஜேர்மன் மொழியில்
ஹைன்றிச் போல்
தமிழாக்கம்: சு.தீபன்.

எனது தாத்தாவின் சொந்த ஊரில் அநேகர் கல்லுடைக்கும் வேலை செய்ததன் மூலமே தமது சீவியத்தை நடாத்தி வந்தனர். ஐந்து தலைமுறைகளாக கல் உடைக்கும் போது உண்டாகும் தூசியைச் சுவாசித்து தமது மரணத்தை நோக்கி, ஆட்டு வெண்ணெயும், உருளைக் கிழங்கும் சாப்பிட்டு பொறுமையுடனும் சந்தோஷத்துடனும் வாழ்ந்து வந்தனர். மாலையில் தமது வீட்டுக் கொல்லையில் குதூகலத்துடன் ஆடினர்; பாடினர்; மிளகுத் தேநீர் குடித்தனர். பகல் முழுவதும் கல்லை ஆதி கால இயந்திரத்தால் உடைத்து, காற்று தூவும் தூசியை பரிசாகப் பெற்றும் வந்தனர். வீட்டில் அவர்களது ஒரே சொத்தான அலுமாரி போன்ற கட்டிலில் பெற்றோரும், பிள்ளைகள் வாங்கில்களிலும் படுத்தனர். காலையில் பழைய கஞ்சி கிடைக்கும்; ஞாயிற்றுக் கிழமைகளில் இறைச்சி; விசேட நாட்களில் அம்மா சிரித்த முகத்துடன் கோப்பிக்குள் பாலை ஊத்த, கோப்பி வெளுக்க, குழந்தைகளின் முகம் கோப்பியின் நிறம் போல் சந்தோஷத்தால் வெண்ணிறமாகும்.

பெற்றோர் காலை விடிய முன்னர் எழுந்து வேலைக்குப் போய் விடுவார்கள். பிள்ளைகளுக்கு வீட்டு வேலை நிறைய இருக்கும். வீடு கூட்டுவார்கள், முற்றம் துப்பரவு செய்வர், சட்டி, பானை கழுவுவர், அருமையான, விலை குறைந்த உருளைக்கிழங்கை மிகக் கவனமாக அதன் தோலை எவ்வளவு மெல்லியதாக முடியுமோ அவ்வளவு மெல்லியதாக உரிப்பர். பள்ளிக்குப் போய் திரும்பி வந்த பின்னரும் பிள்ளைகளுக்கு வேலை உண்டு. காட்டுக்குச் சென்று அந்த காலப் பகுதிக்கேற்றவாறு காளானும், மூலிகைகளும் சேகரிப்பர்: சீரகம், மிளகு, கறுவா, கராம்பு. கோடை காலத்தில் அறுவடைக்குப் பின்னர் வைக்கோல் எடுத்துக் கொண்டு வருவர்.

ஒரு கிலோ வைக்கோலுக்கு ஒரு பெனிக் கிடைக்கும். சந்தையில் இதே வைக்கோல் 20 பெனிக் இற்கு விற்பனையாகும். காளான் தான் விலை கூடியது. ஒரு கிலோவிற்கு 20 பெனிக் கிடைக்கும். நகரத்தில் ஒரு மார்க் 20 பெனிக்கிற்கு அக் காலத்தில் விலை போனது. இலையுதிர் காலத்தில் காட்டுக்குள் தொலைவில் இருண்ட பசுமைக்குள் குழந்தைகள் தவழ்ந்து தவழ்ந்து தமக்கென ஒதுக்கிய இடத்தில் காளான் பிடுங்கினர். காட்டில் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு குடும்பத்திற்கென ஒதுக்கப் பட்டிருந்தது.

காட்டு சொந்தக்காரரான பாலெக்கினரே கற்சுரங்கத்தின் உரிமையாளராவர். பாலெக்கினர் எனது தாத்தாவின் சொந்த ஊரில் ஒரு மாளிகையில் வாழ்ந்து வந்தனர். வீட்டு முகப்பிலுள்ள பால் வழியும் குசினிக்கு முன்னால் உள்ள தாழ்வாரத்தில் தான் காளான், மூலிகை என்பன நிறுத்து காசு கொடுக்கப் படும். அங்குள்ள மேசையொன்றில் பாலெக்கின் ஆதிகால பொன் பித்தளைக் கலவையினால் நிறமூட்டப்பட்ட தராசு இருக்கும். எனது தாத்தாவின் தாத்தா அதன் முன்னர் தமது அசுத்தக் கைகளில் காளான் பைகளுடனும் வைக்கோல் மூட்டைகளுடனும் பாலெக் எடைக் கல்லை வைக்க தராசின் அங்கும் இங்கும் மாறி, மாறி ஆடும் நாக்கு அந்த மெல்லிய நடுவிலுள்ள கோட்டை, நியாயத்தின் கோட்டை, அடையும் வரை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பார். அதன் பின்னர் பாலெக் அம்மா பெரிய புத்தகம் ஒன்றில் நிறையைப் பதிந்து காசு கொடுப்பார். ஒரு பெனிக், பத்து பெனிக் வெகு அருமையாக ஒரு மார்க் கிடைக்கும்.

எனது தாத்தா குழந்தையாக இருந்த போது அங்கே ஒரு பெரிய போத்தலில் நிறைய இனிப்பு இருந்தது. அந்த வளவை ஆண்டு வந்த பாலெக் அம்மா நல்ல மூடில் இருந்தால் அந்தப் போத்தலைத் திறந்து ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஒரு இனிப்புக் கொடுக்க, பிள்ளைகளின் முகம் அம்மா விசேட நாட்களில் கோப்பிக்கு பால் ஊற்றும் போது வெண்ணிறமாகுமே அதே போல் மாறும்.

பாலெக்கினரின் சட்டங்களில் ஒன்று: தமது வீட்டில் எவருமே தராசு வைத்திருக்க இயலாது. அந்த சட்டம் மிக மிகப் பழையது; எவருக்குமே அது எப்போது இயற்றப் பட்டது, ஏன் என்ற விபரம் எதுவும் தெரியாது. ஆனால் யார் அந்த சட்டத்தை மதிக்க வில்லையோ அவர்கள் கற்சுரங்கத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப் படுவதுடன் அவர்களிடமிருந்து காளான், வைக்கோல், சீரகம் எதுவும் ஏற்கப்படாது. அத்துடன் பாலெக்கின் அதிகாரத்தின் மூலம் அயற் கிராமங்களிலும் எவரும் அவர்களுக்கு வேலை கொடுக்கவும் மாட்டார்கள்; மூலிகையும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆனால் எனது தாத்தாவின் தாத்தாவின் காலத்திலிருந்தே யாரும் இச் சட்டத்தை மீறவில்லை. பொன்-பித்தளைக் கலவையான, மின்னும் அந்தத் தராசைப் பார்க்கும் போது எவருக்குமே சந்தேகிக்க எண்ணம் தோன்றவில்லை.

அந்தக் கிராமத்தில் முதன் முதலில் அந்தத் தராசைப் பரிசீலிக்குமளவுக்கு துணிந்தது எனது தாத்தா ஆகும். எனது தாத்தா புத்திசாலியும் கடின உழைப்பாளியுமாவர்.

குழந்தையாக இருந்தபோதே நிறைய காளான் சேகரித்துக் கொண்டு வருவார். பாலெக்கிடம் கொடுத்த அத்தனை மூலிகை, காளான், வைக்கோல் என்பவற்றின் எடையையும் தாத்தா ஒவ்வொரு நாளும் எழுதுவார். அத்தோடு தான் பெற்றுக் கொண்ட காசின் பெறுமதியையும் அதன் பக்கத்தில் எழுதுவார். ஒவ்வொரு சதத்தையும் தனது 7ம் வயதிலிருந்து 12ம் வயது வரை எனது தாத்தா எழுதி வந்தார். அவர் 12 வயதான போது 1900ம் ஆண்டும் வந்தது.

மாளிகையில் வசித்து இரண்டு குதிரை வண்டியில் பயணம் செய்து வந்த பாலெக் குடும்பம் கிராமத்திலிருந்து ஒரு இளைஞனுக்கு பட்டணத்தில் சமயம் படிப்பதற்கு பணம் கொடுத்து வந்தனர். 1900 ம் ஆண்டு வருடப் பிறப்பின் போது பாலெக் குடும்பத்தின் சமூக சேவையைப் பாராட்டி பாலெக் குடும்பத்தினருக்கு எங்கள் நாட்டு அரசர் நேரே வந்து பிரபுப் பட்டம் வழங்குவதாக இருந்தது. அரசரிடமிருந்து பிரபுப் பட்டம் கிடைப்பதால் கிராமத்திலிருந்த அனைவருக்கும் பிரேசிலிருந்து வந்த கால் இறாத்தல் கோப்பியும் ஆண்களுக்கு பியரும், சுருட்டும் வழங்கி, விழா ஒன்றும் பாலெக் குடும்பத்தினர் எடுத்தனர். ஊரின் மத்தியிலிருந்து பல குதிரை வண்டிகள் மாளிகைக்கு அழைத்துச் செல்லத் தயார்ப்படுத்தப் பட்டன.

விழா நடப்பதற்கு முதல் நாள் ஏறத்தாழ நூறு வருடங்களாக தராசு வைக்கப் பட்டிருந்த தாழ்வாரத்தில் கோப்பி கொடுக்கப்பட்டது.

அன்று புதுவருடத்திற்கு முதல் நாள் சாயந்தரம். கிராமத்திலுள்ள வீடுகள் எல்லாம் புதுக்கோலம் பூண்டு கொண்டிருந்தன. விசேட உணவுகள் தயாரிக்கப் பட்டுக் கொண்டிருந்தன. வீட்டிலுள்ள சிறார்களுக்கு வீட்டில் ஏராளமான வேலைகள் இருந்தன.

எனவே எங்கள் தாத்தாவை எங்கள் வீட்டுக்கும் அயலிலுள்ள மூன்று வீடுகளுக்குமான கோப்பியை எடுத்து வரும்படி அனுப்பினர்.

மாளிகைக்கு வந்த தாத்தா தாழ்வாரத்தில் வைக்கப்பட்ட வாங்கில் அமர்ந்தார்.

மாளிகைப் பணியாள் கேற்றூட் நான்கு பெட்டி கோப்பயை எண்ணிக் கொண்டிருக்கும் போது ஒரு தட்டில் அரை கிலோ படி வைக்கப்பட்ட தராசு தாத்தாவின் கண்ணில் விழுந்தது. பாலெக் அம்மா விழாத் தயாரிப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். தாத்தாவிற்கு இனிப்பு கொடுப்பதற்காக கேற்றூட் இனிப்புப் போத்தலைப் பார்த்த போது அதற்குள் இனிப்பு எதுவும் இருக்கவில்லை. தாத்தாவிற்கு இனிப்பு எடுத்து வர கேற்றூட் உள்ளே சென்றபோது தொழிற்சாலையில் அடைக்கப்பட்டு, ஒட்டப்பட்ட அரைக்கால் கிலோ கோப்பிப் பெட்டிகள் நான்குடன் அந்தத் தராசின் முன்னே தாத்தா தனிமையில் விடப்பட்டார். ஒரு தட்டில் ஏற்கனவே அரைக் கிலோ படியிருக்க மறு தட்டில் நான்கு கோப்பிப் பைக்கற்றுகளையும் தாத்தா வைக்க தராசின் கறுத்த நாக்கு மெதுவாக எழுந்து, ஆடி அசைந்து நடுவிலிருந்த கோட்டைக் கடக்காமல் நின்றபோது தாத்தாவின் நெஞ்சு திக் திக் என்றது. ஒரு தட்டில் அரைக் கிலோ படி கீழேயும் மறு தட்டில் அரை கிலோ கோப்பி ஆடிக் கொண்டும் நின்ற போது தாத்தா பதற்றத்துடன் தன் காற்சட்டைப் பையில் எப்போதும் வைத்திருக்கும் கூழாங்கற்களை எடுத்து கோப்பிப் பக்கற்றுக்களின் அருகில் மூன்று ... நான்கு... ஐந்து... என வைக்க அந்த நியாயத்தின் நாக்கு தராசின் நடுவில் உள்ள கோட்டை அடைந்தது. தாத்தா உடனடியாக கோப்பியையும் கற்களையும் தராசிலிருந்து எடுத்து கற்களை பையில் போட்டார்.

குழந்தைகளின் முகங்களை அவ்வப்போது பூரிப்பால் சிவக்க வைக்கும் இனிப்புடன் கேற்றூட் வந்த போது தாத்தாவின் வெளிறிய முகத்தைத் தவிர அங்கு வேறு எவ்வித மாற்றமும் இருக்கவில்லை.

தாத்தா மூன்று பக்கெட் கோப்பியை மட்டும் எடுத்து, கேற்றூட் பயத்துடனும் அதிசயத்துடனும் அந்த வெளிறிய முகத்துடன் நின்ற தன்னைப் பார்க்க, அவர் இனிப்பை நிலத்தில் வீசி: "நான் பாலெக்குடன் பேச வேண்டும்" என்றார்.

"பாலெக் அம்மா என்று சொல்" கேற்றூட்.

"சரி, பாலெக் அம்மா".

கேற்றூட் தாத்தாவைப் பார்த்து நகையாட, தாத்தா இருட்டினுள் கிராயத்துக்குத் திரும்பி அயல் வீடுகளில் கோப்பியைக் கொடுத்து விட்டு, பாதிரியாரிடம் போவதாக வீட்டில் கூறினார்.

ஆனால் தாத்தா அந்த இரவினுள் தராசு வைத்திருக்கும் ஒருவரைத் தேடிப் போய்க் கொண்டிருந்தார்.

அந்தக் கிராமத்திலும் அயற் கிராயங்களான பிளாகொ, பேர்னோவில் யாரிடமும் தராசு கிடையாது.

தாத்தா காட்டின் ஊடாக இரு மணி நேர நடையின் பின் மருந்துக் கடைக் காரர் ஹோனிக் வசிக்கும் சிறு நகரமான டீல்ஹைம் வந்த போது ஹோனிக் வீட்டில் கேக் வாசனை மிதந்து வந்தது.

தனது மெல்லிய உதட்டினுள் சிகரெட்டைச் செருகிக் கொண்டு, வீட்டுக்கு வந்த பையனின் கரங்களைப் பற்றி "உன்னுடைய அப்பாவின் நாக்கில் வருத்தம் கூடிவிட்டதா ?" என மருந்துவர் கேட்டார்.

"இல்லை. நான் மருந்து வாங்க வரவில்லை. நான் வந்து...." தாத்தா தனது பையிலிருந்து கூழாங்கற்களை எடுத்து ஹோனிக் இன் முகத்தின் முன்னர் தூக்கிப் பிடித்து "நான் இந்தக் கற்களை நிறுக்க வந்தேன்" என்றார். மிகவும் பதற்றத்துடனும் பயத்துடனும் நின்று கொண்டிருந்த தாத்தாவைப் பார்த்து ஹோனிக் நகைக்கவில்லை. எதுவும் கேட்கவுமில்லை.

"இது..இது தான் நியாயத்தில் குறைகிறது" தாத்தா கூறும் போது அந்த வீட்டின் குளிரற்ற தாழ்வாரத்தில் தனது கிழிந்த

சப்பாத்தினூடாகக் கால்கள் முழுவதும் ஈரமானதை உணர்ந்தார். காட்டு மரக்கிளைகளிலிருந்து விழுந்த பனி தாத்தாவை முழுமையாக நனைத்திருந்தது. பனி உருகிக் கொண்டிருக்க தாத்தா களைப்புடனும், பசியுடனும் தான் சேகரித்த காளான்கள், பறித்த மூலிகைகளை நினைத்தார்.

ஒவ்வொரு முறையும் அந்தத் தராசில் நிறுக்கப் பட்ட போது ஐந்து கூழாங்கற்கள் நிறை மோசடி செய்யப் பட்டதை நினைத்த போது தாத்தா திடீரென விம்மி விம்மி அழத் தொடங்கினார்.

ஐந்து கூழாங்கற்களையும் நிறுப்பதற்காக ஹோனிக் உள்ளே சென்ற போது எனது தாத்தா தனது தந்தையும், அவரது தந்தையும் அனைவரும் காலங்காலமாக ஏமாற்றப்பட்டதை எண்ணி எண்ணி அழுது கொண்டேயிருந்தார். ஹோனிக் இன் மனைவி தேநீரும், கேக்கும் கொண்டு வந்து கொடுத்த போதும் நிற்காத அழுகை, ஹோனிக் உள்ளிருந்து வந்து "சரியாக ஐம்பத்தைந்து கிராம்" என்ற போது நின்றது.

தாத்தா திரும்பி இருமணி நேரம் நடந்து வீட்டுக்கு வந்து, வீட்டில் அடி வாங்கி, மௌனித்து, கோப்பியைப் பற்றிக் கேட்ட போது ஒரு வார்த்தையும் பேசாமல், அந்த இரவு முழுவதும் தனது குறிப்புப் புத்தகத்தில் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார். நள்ளிரவு நெருங்கிய போது கோயில் மணியோசைச் சத்தத்திலும், கிராம கோலகலத்தின் மத்தியிலும் குடும்பத்தினர் ஒருவரையொருவர் முத்தமிட்டு, அரவணைத்தபோது புதுவருடத்தை உடைத்துக் கொண்டு "பாலெக்கினர் எனக்கு 18 மார்க்கும் 32 பெனிக்கும் கடன் பட்டுள்ளனர்" என்றார்.

மறுநாள் பாலெக்கினர் தமது நீல உடையுடன், பொன்னிறக் குதிரை வண்டியில் கோயிலுக்கு வந்த போது வெளிறிய இறுகிய முகத்துடன் அனைவரும் அவர்களை முறைத்துக் கொண்டிருந்தனர். வாழ்த்துப் பாக்களையும், கோஷங்களையும் எதிர்பார்த்து வந்த பாலெக்கினரை துவேஷத்துடனும், நிசப்தத்துடனும் கிராம மக்கள் எதிர்கொள்ள, பாலெக்கினரை ஆசீர்வதிக்க வந்த பாதிரியார் ஒருபோதும் இல்லாதவாறு அந்த அமைதியான, சமாதானமான மக்கள் விறைப்பாக இருப்பதை பார்த்து தடுமாற்றத்துடன் ஆசிர் வாத்தைக் கூறி வியர்வையில் ஊறி தனது அறைக்குத் திரும்பினார்.

பாலெக்கினர் பூசை முடிந்து திரும்பிய போது பாலெக் அம்மா வெளிறிய முகத்துடன் நின்ற எனது தாத்தாவைப் பார்த்து *"ஏன் நீ உனது அம்மாவுக்கு கோப்பி கொண்டு செல்லவில்லை"* என்றார். எனது தாத்தா எழுந்து நின்று *"நீங்கள் எனக்கு ஐந்து கிலோ கோப்பியளவு காசு கடன் பட்டுள்ளதால்.."* என்று தனது பையிலிருந்து கூழாங் கற்களை எடுத்து, தூக்கி, பாலெக்கின் முகத்தின் முன் நிறுத்தி *"உங்கள் நியாயத்தில் இவ்வளவு, ஐம்பத்தைந்து கிராம், குறைகிறது"* என முடித்தார். அந்தப் பெண் ஏதாவது கூற முன்னர் கோயிலிலிருந்த ஆண்களும், பெண்களும் *"ஓ. நியாய தேவனே, உன்னை அவர்கள் கொன்று விட்டனர்..."* எனப்பாடினர்.

பாலெக்கினர் கோயிலில் நின்ற போது வோக்லா, எங்கள் கிராமத்தில் தடித்த பெரிய மனிதன், பாலெக்கின் மாளிகைத் தாழ்வாரத்தில் அந்தத் தராசையும், அந்த பெரிய தோலுறை போட்ட, மூலிகை, காளான் மற்றும் சகல கணக்குகளும் பதிந்திருந்த புத்தகத்தையும் திருடிவிட்டான்.

புது வருட நற்பகலிலிருந்து கிராமத்து ஆண்களெல்லாம் எனது பாட்டாவின் வீட்டு வளவில் தாம் கொடுத்த காளான், மூலிகைகளின் கணக்கை பார்த்து, பார்த்து... ஆயிரக்கணக்கில் கணக்கு வளர்ந்து கொண்டு போனபோது, கிராம சேவகரின் பொலிஸ் படை அமளியுடன், கத்தியுடனும், துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டும், பாட்டாவின் வீட்டினுள் புகுந்து பலாத்காரமாக தராசையும், புத்தகத்தையும் பறித்தனர். எனது தாத்தாவின் தங்கை, சின்னஞ் சிறிய லூட்மில்லா கொலை செய்யப்பட்டாள். பல ஆண்கள் காயமடைந்தனர். எங்கள் கிராமத்தின் பெரிய, தடித்த மனிதன் வோக்லா ஒரு பொலிசைக் கத்தியால் குத்திச் சாய்த்தான்.

எங்கள் கிராமத்தில் மட்டுமன்றி அயற் கிராமங்களான பிளாகொ, பேர்னோ இனும் ஏறத்தாழ ஒரு கிழமையாக கலவரம் தொடர்ந்தது.

ஆனால் நிறையப் பொலிஸ் படை வந்து ஆண்களையும், பெண்களையும் சிறையிலிடுவதாக மிரட்டினர்.

பாலெக்கினர் பள்ளிக்கூடத்தில் பாதிரியாரை தராசில் பிழை எதுவுமில்லை என அனைவருக்கும் நிரூபிக்கும் படி தூண்டினர். இதன் பின்னர் ஆண்களும், பெண்களும் மீண்டும் கல்லுடைக்கச் சென்றார்கள். பள்ளிக்கூடத்திற்கு மட்டும் பாதிரியாரைப் பார்க்க எவரும் செல்லவில்லை. பாதிரியார் அநாதரவாக, வருத்தத்துடன் தராசுடனும், படிக் கல்லுகளுடனும் கோப்பிப் பைக்கற்றுகளுடனும் பாடசாலையில் நின்றார்.

குழந்தைகள் மீண்டும் காளான், மூலிகைகள் சேகரித்தனர். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பாலெக்கினர் கோயிலுக்கு வரும் போது மட்டும் *" ஓ. நியாயதேவனே உன்னை அவர்கள் கொன்றுவிட்டார்கள்"* எனும் பாடல் பாடப்பட்டது. சில காலங்களில் கிராம சேவகரின் உத்தரவின் பிரகாரம் அப் பாடல் தடைசெய்யப்பட்டது.

எனது தாத்தாவின் பெற்றோர்கள் அந்தக் கிராமத்தையும், புதிதாகக் கட்டப்பட்ட அவர்களின் மகளின் கல்லறையையும் விட்டு வெளியேறினர். ஆயினும் தராசு பிழையாக நிறுப்பதை பார்க்கும் போது உண்டாகும் வலியைச் சகிக்க முடியாததால் அவர்களால் ஒரு இடத்திலும் நிலைத்து நிற்க முடியவில்லை. தமது மாட்டு வண்டியில், ஆடு பின்தொடர, நகர்ப்புற வீதியில் அவர்கள் நகர்ந்து கொண்டிருந்தனர். வண்டியைக் கடக்கும் எவரும் வண்டிக்குள் இருந்து *"ஓ. நியாய தேவனே உன்னை அவர்கள் கொனறுவிட்டார்கள்"* எனும் பாட்டைக் கேட்கலாம். இப் பாட்டைக் கேட்டவர்கள் பாலெக்கின் தராசுக் கதையையும் அறியலாம். ஆனாலும் ஏறத்தாழ எவருமே அதைக் கேட்பதேயில்லை.



# கியூபா

## "யாரும் எம்மீது எதையும் திணிக்கமுடியாது."
### -பிடல் கஸ்ரோ.

• ந.குமார் •

கடந்த யூலை மாதம் 9ம் திகதி முதல் கியூப மக்கள் சிலர் அங்குள்ள ஸ்பானிய, இத்தாலிய, செக்கோஸ்லாவாக்கிய நாடுகளின் துதாரகங்களிலும், அவர்களது இல்லங்களிலும் படிப்படியாக தஞ்சம் புக ஆரம்பித்து இருந்தனர். ஏறத்தாழ 45க்கு மேற்பட்டோர் யூலை 28ம் திகதி வரை இவ்வாறு தஞ்சம் அடைந்திருந்தனர். இதனால் கிழக்கு ஐரோப்பிய நாடுகள்போல் புதிய நெருக்கடி ஒன்றை கியூபாவும் சந்திக்கப் போகின்றது என்ற பிரச்சாரத்தை அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் முடுக்கிவிட்டிருந்தன.

இந்நெருக்கடியை அடுத்து கியூபத்தலைவர் பிடல் கஸ்ரோ வெளிநாடு செல்ல விரும்புவர்களை தமது அரச அனுப்பிவைக்கத் தயாராக இருக்கிறது எனவும், துதாரகங்களில் தஞ்சமடைந்தவர்கள் மீளவும் கியூபாவிலேயே வாழவிரும்பினால் அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது எனவும் விடுத்த அறிவிப்பையடுத்து தஞ்சமடைந்தவர்களில் பலர் தமது கோரிக்கைகளை வாபஸ் பெற்றுக்கொண்டனர். இதனால் பரபரப்பூட்டிய இவ்விவகாரம் பிசுபிசுப்படையத் தொடங்கியது. தற்சமயம் சுமார் 12 பேர் வரையிலேயே ஸ்பானிய துதாகத்தில் இருக்கின்றனர். இவ்விவகாரமானது கியூப-ஸ்பானிய உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தி வருகின்றது.

தமது கோரிக்கைகளை வாபஸ் வாங்கி துதராலயங்களை விட்டு வெளியேறியவர்களை கியூபத் தொலைகாட்சி நிறுவனம் பேட்டி கண்டபோது தாம் இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு கியூபாவிலுள்ள மேற்கு ஜேர்மன் துதரக முதலாவது செயலாளர் பீட்டர் சால(PETER SCHALLE) என்பவரே தம்மை முதலில் அணுகி இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஆலோசனை கூறியிருந்தாரென அவர்கள் தெரிவித்திருந்தனர். தற்போது பீற்றர் சால உட்பட எல்லோரும் அமைதியாக இருப்பதாகவும் மேற்படி துதாக-புகலிட பிரச்சனைகளுக்குரிய முழுப்பொறுப்பையும் அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்து இருக்கின்றனர். இக்குற்றச்சாட்டை பொன் (BONN) இல் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் அர்த்தமற்றதும் ஆதாரமற்றதும் என மறுத்துள்ளார்.

அதேவேளை ஸ்பானிய அரசு கியூபாவிற்கு வழங்க இருந்த 2.5 மில்லியன் அமெரிக்க டாலர்களை நிறுத்தி வைத்துள்ளதாக திடீர் அறிவிப்பு செய்துள்ளது. இவ்வறிவிப்புக்கு பதிலளிக்கும் முகமாக கியூபத் தலைவர் பிடல் கஸ்ரோ கியூபாவில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் "கியூப மக்கள் வெளிநாடு செல்ல விரும்புவார்களாயின் அவர்கள் போக விரும்பும் தேசத்தின் அனுமதி (VISA) இருப்பின் அவர்களை அனுப்பிவைக்க நாம் தயாராகவே உள்ளோம். இதனை மீறி துதராலயங்களில் தஞ்சம்புகுந்து வெளிநாடு செல்ல முயற்சிப்போர் தமது கனவுகளை மறந்துவிடவேண்டும். இப்படியான திணிப்பு நடவடிக்கைகள் கியூபாவைப் பொறுத்தவரை செல்லுபடியாகதென குறிப்பிட்டிருந்தார். மேலும் அவர் உரையாற்றுகையில் நாம் ஸ்பானிய நாட்டிற்கு மட்டுமல்ல எந்தவொரு நாட்டு அரசியலுக்கும் எதிரானவர்கள் அல்ல, அவர்கள் கொடுக்கின்ற பொருளாதார உதவியினுடாக எமது உள்நாட்டு அரசியலை வழிநடத்த விரும்புவார்களாயின் அவர்களது பொருளாதார உதவியை ஏற்பது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்திருந்தார்.

1959 இல் வெற்றிபெற்ற கியூபப் புரட்சியிற்குப்பின் கியூபாவின் அரசியல் பொருளாதார கட்டமைப்புக்களை கட்டியெழுப்பும் பாரிய பொறுப்பு பிடல் கஸ்ரோவின் தலைமையிலான கியூப கம்யூனிச கட்சிக்கு சுமத்தப்பட்டது.


மற்றைய சோசலிச முகாம்களை போலல்லாது கியூபாவானது தமது

வளர்ச்சியில் புதிய அத்தியாயத்தை வெளியுலகிற்கு காட்டி நிற்கிறது. சுயதேவை பொருளாதார வளர்ச்சி, அடிப்படைக் கல்வி நெறி, சுகாதார சேவைகள் ஆகியவற்றோடு தேசியவிடுதலைப் போராட்டத்திலும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திலும் ஈடுபட்டுவரும் சக்திகளுக்கு ஆக்கபூர்வமான உதவிகளை வழங்குவதிலும் தனது தனித்துவத்தை பேணிவருகின்றது. இதனால் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள கியூபா தற்போது சந்தித்துக் கொண்டிருக்கும் நெருக்கடிகளின் மத்தியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக பலமுனைகளிலும் புதிய நடைமுறைகளை செயற்படுத்தி வருகிறது.

கியூபாவின் புரட்சிகர விடுதலைக்குப்பின் கியூப மக்களினது வளர்ச்சி, வாழ்க்கைமுறை ஆகியவற்றை நேரடியாக அறிவதற்காக உலகின் பலபாகங்களிலுள்ள முற்போக்காளர்கள் கியூபா சென்றுவர வருடாவருடம் ஒழுங்கு செய்யப்படும் குழுவில் (JOSE MARTI IINTERNATIONAL BRIGADE) இணைந்து செல்ல கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அறிந்தவற்றை குறிப்புகளாக இங்கு தருகிறேன்.

கியூபாவின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முதன்முதலில் ஆரம்பித்தவரும், சர்வதேசவாதியுமான திரு.யோசே மாட்டி (JOSE MARTI) அவர்களின் மறைவின் பின்னர் ஒவ்வொரு வருடமும் சுமார் 6 கிழமைகள் ஒழுங்கு செய்யப்படுகின்ற கியூபாவிற்கான பயணங்கள் யோசே மாட்டி சர்வதேச பிரிகேட் (Jose Marti International Brigade) என அழைக்கப்படுகிறது.

இக் குழுவில் ஜேர்மனி, ஒஸ்ரியா, சுவிற்சலாந்து, பிரான்ஸ், லண்டன், பெல்ஜியம், இத்தாலி, ஸ்பெயின், நெதர்லாந்து, போர்த்துக்கல் ஆகிய நாடுகளிலிருந்து மொத்தம் 350 பேர் அளவில் கலந்து கொண்டனர்.



திரு. ஜோசே மாட்டி.

நாம் கியூபாவின் தலைநகரான ஹவானா(Havanna) விமான நிலையத்தை அடைந்த போது எமது நிகழ்ச்சிகளின் ஐரோப்பிய பிராந்திய பொறுப்பாளர் தோழர் டானியல் எம்மை விமான நிலையத்தில் வரவேற்று எம்மை சர்வதேச முகாமிற்கு அழைத்துச் சென்றார். கிட்டத்தட்ட ஹவானாவிலிருந்து 70 கி.மீ. தூரத்திலுள்ள கமிற்றோ (Camito) எனும் சிறு நகரிலேயே எமது முகாம் அமைந்திருந்தது. காலநிலை சுற்றாடல் யாவும் ஈழத்தின் வளம் நிறைந்த ஒர் வன்னிப்பகுதியில் இருப்பதாக ஒர் உணர்வு.

எமது குழுவிற்காக வழங்கப்பட்ட பணி இருபத்திஐந்து சிறு வீடுகளுக்கு அத்திவாரம் வெட்டுதலும், கொய்யாப்பழம் பிடுங்குதலும் ஆகும். ஏற்கனவே அக்கிராமத்திலேயே பதிவு செய்யப்பட்டிருந்த 25 குடும்பங் களுக்கு இவ் வீடுகள் கட்டி முடிந்த பின் கையளிக்கப்படுமென அவ்வூர் கிராம முன்னேற்றச் சங்க பொறுப்பாளர் எமக்கு தெரிவித்தார். எம்மால் பிடுங்கப்படும் கொய்யாப்பழங்கள் யாவும் தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு பழரசம், ஜாம் (Jam) ஆகியவற்றிற்கும், மறுபகுதி ஏற்றுமதி செய்யப்படும் எனவும் அவர் கூறினார். கியூபாவில் சோசலிச அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கான எமது பங்களிப்பாகவும், அதேவேளை அக்கட்டமைப்பை உருவாக்குவதில் ஏற்படுகின்ற நடைமுறைப் பிரச்சனைகளை நேரில் நாம் பார்க்க வசதியாகவும், கியூப மக்களுக்கு உளரீதியாக உற்சாகத்தை ஏற்படுத்துவதற்குமே இத்தகைய வேலைத் திட்டங்கள் வருடாவருடம் நிகழ்த்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கியூபாவில் அரச ஊழியர்கள்,பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள் ஆகியோர் தமது விடுமுறை நாட்களில் குறிப்பிட்ட சில நாட்களை இத்தகைய பொதுப் பணிகளுக்காக ஒதுக்கிச செயற்பட்டு வருவது வழக்கமாகும்.

கியூபாவின் பிரதான உற்பத்திகளாக கரும்பு, புகையிலை, பழங்கள் என்பவற்றுடன் கனிப்பொருள் நிக்கலும் இடம் பெறுகின்றது.இவற்றில் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உல்லாசப் பயணத்துறை அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் மற்றுமொரு துறையாகும். ஸ்பெயின் நாட்டு முதலீடுகள் கியூப அரசுடன் இணைந்து உல்லாசத்துறையில் பல கூட்டு முதலீடுகளைச் செய்துள்ளது. ஸ்பெயின், நோர்வே, கனடா, மேற்கு ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்தே அதிகமான உல்லாசப் பயணிகள் கியுபாவிற்குச் செல்கின்றனர். இவற்றைவிட மேலதிகமாக தேவைப்படும் பொருளாதார உதவிகளை சோசலிச நாடுகளுக்கு முன்னுரிமை வழங்கியே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே பெற்றுவருகின்றது. சோவியத் ஒன்றியத்திலிருந்து 13 மில்லியன் தொன் எரிபொருளைக் கியூபா ஒரு வருடத்திற்குப் பெற்றுக் கொள்கின்றது.

எமக்கு வழங்கப்பட்ட வீடு கட்டும், பழம்பிடுங்கும் பணிகளின்

மத்தியில் ஒரு நாள், புரட்சியைக் காக்கும் படை (Committe for defending the Revolution) உறுப்பினர்கள் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாம் தங்கியிருந்த கிராமமான கமிற்றோவில் (Camito) இப் படை அணிகளின் தலைவியான திருமதி.பிரான்சிஸ் எமக்கு இக் குழு குறித்தான விளக்கங்களை அறியத்தந்தார்.

கியூபப் புரட்சியின் பின்னர் கியூப மக்களின் உதவியுடன் கிராமத்திற்குக் கிராமம் புரட்சியைக் காக்கும் படைக்குழு (Committe for defending the Revolution) அமைக்கப்பட்டது. இக் குழுவில் அக் கிராமத்திலுள்ள பதினான்கு வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். இவர்கள் இதில் சேரும் போது அங்கத்துவ பணம் செலுத்துதல் வேண்டும். கிராமத்திற்கு கிராமம் அமைந்துள்ள இக் குழுவின் செயற்பாடுகளில் அக் கிராமத்திற்கான தேவைகளை சிரமதானம் மூலம் செய்தல், அவ்வப்போதைய அரசியல் நிலைப்பாடு பற்றி விவாதித்தல், இரவு நேரங்களில் கிராமத்தைச் சுற்றிக் காவல்



புரட்சியை பாதுகாக்கும் படைக் குழு ஒன்றின் தலைவி.

செய்தல்(Centry) ஆகியனவும் அடங்கும். இக் குழுவானது கிராம மக்களிடையே ஏற்படுகின்ற சமூக, குடும்ப பிரச்சனைகளையும் தலையிட்டு தீர்த்து வைக்கின்றது. அத்துடன் காவல் கடமையில் ஈடுபடுவோர் கிராமத்தினுள்ளே இனம் தெரியாதோரை உட்பிரவேசிக்காமல் தடுத்தல், கிராமத்தில் களவு, கொள்ளை என்பன நடைபெறாமல் பாது காத்தல் என்பனவற்றையும் செய்வர்.

அத்துடன் இக்குழுவில் அங்கத்தவரானோர் இராணுவக் கல்வியும் பெற்றிருப்பர்.அமெரிக்க பயமுறுத்தல் எந்நேரமும் கியூபா விற்கு இருப்பதால் கியூபா மீது அமெரிக்கா எந்நேரமும் படை எடுக்கலாமென்ற அபாயம் உண்டு. இதற்கு முதற் தயாரிப் பாகவே கியூப அரசும் மக்களும் தம்மைத் தயாராக வைத்துள்ளனர். கியூபா முழுவதும் அபாய அறிவிப்பு மணிகள் கட்டப்பட்டுள்ளன. இவ் அபாய அறிவிப்பு மணி அடித்து போருக்குத் தயாராகவும் என்ற அறிவிப்புக் கிடைத்த 6 நிமிட நேரத்தில் இக் குழுவினர் தமக் கென ஒதுக்கப்பட்ட ஆயுதங் களை ஆயுதக்கிடங்குகளில் இருந்து எடுத்துக் கொண்டு தமது இடங் களுக்குச் செல்லவேண்டும். ஆண்கள் தாக்குதலுக்கு வசதி யான மறைவிடங்களில் நிலை கொண்டிருக்க பெண்கள் ஆபத்திற்கு உள்ளாகக்கூடிய பகுதிகளிலுள்ள மக்களையும் பொருட்களையும் அப்புறப்படுத்தும் பணியில் இவர்கள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளனர். இவைபற்றி எமக்கு விளக்கம் அளித்த இப்படைப்பிரிவின் தலைவி, போரறிவிப்புக் கிடைத்ததும் தாம் விரைந்து செயற்படுவோம் எனவும் தமது தாய்நாட்டிற்காகவும், சோசலிசத்தை பாதுகாக்கவும் தங்களது உயிர்களை அர்ப்பணிக்கத் தயாராக இருப்ப தாகவும் உணர்வுபூர்வமாகக் கூறினார்.

எமக்கு வழங்கப்பட்ட பணிகளின் போது " இளைஞர்களுக்கான தீவு" (Island for Youth) என்று அழைக்கப்படும் தீவிற்கு நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். நாம் இருந்த இடத்திலிருந்து 100 கிமீ. தூரத்திலுள்ள அத்தீவை அதி வேக மோட்டார் படகின் மூலம் சென் றடைந்தோம்.

அத்தீவின் இளம் சோசலிஸ்ட்டுகள் அமைப்பின் தலைவர் வரவேற்று எமது அன்றைய நிகழ்ச்சி நிரல் பற்றி அறியத் தந்தார். கியூப அரசினால் மொசாம்பிக் நாட்டு மக்கள் படிப்பதற்கென அமைக்கப்பட்ட பாடசாலையை பார்வையிடுவது அன்றைய எமது நிகழ்ச்சி நிரலின் பிரதான பகுதியாக இருந்தது.

சுமார், 500 மாணவர்களைக் கொண்ட அப் பாடசாலையில் கியூப-மொசாம்பிக் நாட்டு ஆசிரியர்கள் கல்வி பயிற்று கின்றனர். மொசாம்பிக் நாட்டில் இருந்து வந்து மேற் படிப்பும், தொழிற் கல்வியும் பயிலும் பல மாணவர்களும், இளைஞர்களுமாக பல தரப்பினரும் அங்கு காணப் பட்டனர். இவர்கள் தமது படிப்பை முடித்தபின் தாய் நாடு திரும்பி அங்கு தொடர்ந்து கடமையாற்ற வேண்டும். இவர்கள் கியூபாவில் இருக்கும் வரையான முழுச் செலவையும் கியூப அரசே பொறுப்பேற்கிறது. மேலும் இவர்கள் தமது கலாச்சாரம் பற்றி பிரச்சாரம் செய்வதற்கும் அங்கு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளது.


கியூப மக்களும் அரசும் தம்மால் இயன்றவரை விடுதலை இயக்கங் களிற்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டக் குழுக்களிற்கும், முன்னுரிமை வழங்கி ஆதரவு அளித்து வருகின்றனர். பாலஸ்தீன விடுதலை இயக்கம்(PLO),தென் மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம் (SWAPO), ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) ஆகிய விடுதலை அமைப்புகளும், கௌத்தமாலா, எல்சல்வடோர்(FMLN), சகாரா, கொண்டுராஸ் நாட்டு விடுதலை அமைப்பு களுக்கும் அமைப்பு பிரச்சார வேலைகள் செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளது.

எமது பயணத்தின் இறுதி வாரமளவில் கியூபாவின் அரசியல்

போக்குகள், நிலைப்பாடுகள் குறித்து விளக்கங்களும் விவாதங்களும் இடம் பெற்றிருந்தன. இச்சந்திப்பில் திரு.கொனிலியன் தலைமை தாங்கினார். கியூபக் கம்யூனிசக் கட்சி மத்திய குழு அங்கத்தினரான இவர், கியூபாவின் தற்போதைய உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பாக உரையாற்றினார்.

1985 ல் சோவியத் யூனியனில் பெரெஸ்ரோய்க்கா, கிளாஸ்நொஸ்ற் எனப்படும் மறுசீரமைப்பும், பகிரங்கத்தன்மையும் அறிமுகப்படுத்தப்பட்டபோது உலக அரசியலில் புதிய வியூகங்கள் வடிவம் எடுத்திருந்தன. சோசலிச நாடுகள் தம்மைத் தாமே சீரமைத்து செயற்படக்கூடிய வழிவகைகளைத் தேடவேண்டி ஏற்பட்டது. இக்கால கட்டத்தில் சீரமைப்புப்பணி (Rectification Process) என்ற கலோகத்தின் கீழ் கியூபாவினும் மாற்றங்கள் ஏற்படலாயின. புரட்சியை விரும்பாதவர்கள் இங்கு ஆரம்ப காலமுதல் இருந்து வருவதைக் கருத்தில் கொண்டு அவர்கள் தாமாக வெளியேறுவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள இளைஞர்கள் மத்தியில் ஐரோப்பிய சமூகங்களைப் போலல்லாது கியூபா புதிய சோசலிச சிந்தனைகளைத் தோற்றுவிக்க வேண்டுமென்பதில் ஆர்வம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

சீரமைப்புப் பணிகளானவை அரசியல் ரீதியிலான சீர்திருத்தங்களாகவும், உயர்கல்வி பற்றியதாகவும், உணவு உற்பத்தியும் பங்கீடும் பற்றியதான திட்டங்களாகவும் அமுலாக்கப்பட்டு வருகின்றன. கட்சிக்குள் நிலவக்கூடிய ஊழல்களை மூடிமறைக்காது அவற்றைப் பகிரங்கப்படுத்தி அதற்காக பகிரங்கத் தண்டனை அளிப்பதில் தலைவர் பிடல் காஸ்ரோ தயங்கவில்லை. இதன் ஒரு உச்சக் கட்டமாகவே கியூப அரசியலின் சர்வதேச விவகாரங்களைக் கையாண்டு வந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் உட்பட




கியூபாவில் முகாம் அமைத்துள்ள எல் சல்வடோர் போராளிகள் எம்மை வரவேற்ற போது..

நால்வருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. இவ் அதிகாரி தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும், சலுகைகளையும் பாவித்து போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டதால் கியூப உயர் இராணுவ நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

உயர் கல்வியைப் பொறுத்தவரையில் பல வருடங்களாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள புள்ளிவிபர தரப்படுத்தல் முறையை நீக்கி அனைத்து மாணவர்களுக்கும் உயர் கல்வி பெறும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. உணவு உற்பத்தியும் பங்கீடும் என்ற தலைப்பிலான திட்டங்கள் விரைவில் அமுல் படுத்தப்படவுள்ளன.

சோவியத் யூனியனினதும் இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் பொருளாதாரக் கூட்டுறவில் புதிய வளர்ச்சி பெற்று வந்த கியூபா தற்போது பொருளாதார நெருக்கடியொன்றை சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந் நெருக்கடியைப் பயன்படுத்தி அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் தலைவர் பிடல் காஸ்ரோவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு குறி வைத்து வருகின்றனர். இப் பின்னணியில் கியூபா சோவியத் யூனியனுடனான தனது உறவுகளை தொடர்ந்து பேணிவரும் வேளையில் சீனாவுடன் புதிய உறவுகளை தோற்றுவித்து உதவிகளையும் பெறத் தொடங்கியுள்ளது. இது கியூபாவின் வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட முக்கிய மாற்றமாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் கியூப அரசு தனது தனித்துவமான வளர்ச்சியை தொடரமுடியுமென நம்பிக்கை கொண்டுள்ளது. ●



நன்றி: TAZ.

## கிழக்கு-மேற்கு ஜேர்மனியின் இணைப்பு!

# "பாராளுமன்ற அரசியலுக்குப் பதிலாக வன்முறைகள் தலைதூக்கும் அபாயங்கள் உண்டு."

*மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் பிறோவோ(PROWO) அரசியல் மாத இதழின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு.வி.குர்ட்(Kurt) உடன் ஒரு சந்திப்பு.*

— க.கவிதா. —

**** கிழக்கு ஐரோப்பாவில், குறிப்பாக கிழக்கு ஜேர்மனியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சோசலிசக் கொள்கைகளுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி என கூறப்படும் பிரச்சாரத்தை பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன ?***

இல்லை, சோசலிச கொள்கைக்கு ஏற்பட்ட வீழ்ச்சியாக நான் இதைக் கருதவில்லை. அதை நடைமுறைப் படுத்துவதில் கையாளப்பட்ட தவறுகளே இன்றைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மாற்றங்களுக்கு காரணமாகும். சோசலிச சமுதாயத்தை கட்டி எழுப்புவதற்காக 1917 ல் சோவியத் யூனியனில் வெடித்த புரட்சி சோசலிச கோட்பாடுகளுக்கு உண்மையானதும், காத்திரமானதுமான பங்களிப்பாகும். இப் புரட்சியினால் ஈர்க்கப்பட்ட சமூகங்களின் மத்தியில் இரண்டாவது உலக மகா யுத்தமானது ஏற்படுத்திய ஜீரணிக்க முடியாத அனுபவங்கள் முதலாளித்துவ, பாசிசம் மீது வெறுப்பை ஏற்படுத்தி இருந்தன. இந்த யுத்தத்தில் சோவியத் யூனியன் தன்னை காப்பதில் காட்டிய வெற்றி பல சக்திகளை ஈர்த்திருந்தது. கிழக்கு ஐராப்பிய நாடுகளிலுள்ள மக்களுக்கு இவ் ஈர்ப்பு அதிகமாக இருந்தது. இக் காலங்களில் சோவியத் யூனியனின் ஆதரவுடன் கிழக்கு ஜேர்மனி சோசலிச கோட்பாடுகளை தாங்கிய ஆட்சி முறையை தழுவியது. இங்கு புகுத்தப்பட்ட முறையானது மேலாண்மை முறை (Super Imposing) எனக் கூறுப்படுவதுண்டு.ஜேர்மனியில் முதலாளித்துவத்திற்கு இடமளிக்காத சட்ட திட்டங்களும், நிலச் சீர்திருத்தச் சட்டங்களும், பிரதானமாக கொண்டுவரப்பட்டு அமுலாக்க பட்டிருந்தன. இவை கொள்கை ரீதியாக மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தி இருந்த போதிலும் இவற்றை அமுலாக்குவதில் அங்கு பின்பற்றப்பட்ட ஒரு கட்சி ஆட்சி முறையின் கீழான ஒருவழி ஜனநாயக தன்மையானது இன்றைய வீழ்ச்சிக்கு முக்கிய ஒரு காரணியாகும். மக்கள் சுயமாக அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு வழிவகைகள் ஏதும் இல்லாத வகையில் எவ்வளவுதான் நல்ல காரியத்தை செய்த போதிலும் அவை அம் மக்களுக்கு உகந்ததாக இல்லை. கட்சி, சோசலிச கட்டுமானத்திற்கான அடையாளத்தை மக்களிடம் தெளிவுபடுத்தவும் இல்லை. மேலும் மேற்குலக நாடுகள் சோசலிசத்திற்கு எதிராக மேற்கொண்டு வந்த பிரச்சாரம் பனிப்போர் (Cold War) ஒன்றிற்கு தூண்டுகோலாய் இருந்தது என்பதும் மறுக்கமுடியாத ஒன்றாகும். இவற்றையே என்னால் இன்றைய நிலைகளுக்கான காரணமாகக் கூறமுடியும்.

**** கிழக்கு-மேற்கு ஜேர்மனியின் இணைவின் மூலம் ஏற்படக் கூடிய நன்மை, தீமை பற்றி எடுத்து கூறமுடியுமா?***

ஐக்கிய ஜேர்மனி என்ற விடயத்தில் நன்மை என்று சொல்வதற்கே இடமில்லை. அப்படிச் சித்தரித்துக் கூறுவது வெறும் மாயை. இந் நடவடிக்கையின் வளர்ச்சிப் போக்கின் முதற் கட்டத்தை நோக்குமிடத்து- இதன் இறுதிப் போக்கானது ஜேர்மனியின் கடந்த காலப் போக்கை நாம் மீண்டும் நினைவு கூர வேண்டியுள்ளது. 6 மில்லியன் யூதர்கள், இடதுசாரிகள், தன்னினச் சேர்க்கையுடயவர்கள், மாற்றுக் கருத்துடையவர்கள் ஆகியோர் கொலை செய்யப்பட்டதும், போலந்து, முழு ஐரோப்பாவுக்கும் எதிரான யுத்தம், தாக்குதல் எல்லாம் மூடி மறைக்கப்படுகிறது. இதுதான் வரலாற்று பரிமாணம், யுத்தங்கள், சண்டைகள் எல்லாம் முடிந்துவிட்டது என்றும் தமது கடந்த காலங்கள் போலல்லாது, யுத்தமற்ற ஓர் புதிய காலம் பிறக்க வேண்டும் என்பதும் பற்றியே தற்போது கதைக்கப் படுகிறது. தொடரும் எதேச்சாதிகாரப் போக்கை இங்குள்ள அமைப்பு வடிவத்தின் மீதும், தனிநபர்கள் மீதும் சுமத்துவதன் மூலம் தமது கடந்த காலம் பற்றிய விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்கள்.

இத்துடன் தேசியவாதம் மீண்டும் முளைவிடுகிறது. இத் தேசியவாதமானது ஆரம்பத்தில் பரபரப்பைக் கொடுத்து மக்களை அணிதிரட்டினாலும் குறிப்பாக கிழக்கு ஜேர்மனியில் குறுகிய காலத்தில் செயலற்று எடுபடாமலே போயுள்ளது. "நாங்கள் திரும்பவும் யார் என்ற" தொனிப்பும், சமூகப் பீதியும், சமூக நெருக்கடியும் இத் தேசிய வாதத்துடன் இணைவதன்

மூலம், வெளிநாட்டவர்கள், மாற்றுக் கருத்துடையவர்கள், இடது சாரிகள் ஆகியோருக்கு எதிரான பிரச்சாரத்தை இத் தேசியவாதம் பிரதிபலித்து முன்னிற்கிறது. சமூக ஜனநாயக கட்சியின் (SPD) வேட்பாளரான லா பொன்ரையின் அகதிகளுக்கான பொதுவுரிமைகள் வழங்கும் அடிப்படைச் சட்டத்தைக் கேள்விக்குறி ஆக்கியுள்ளார். கிறிஸ்தவ ஜனநாயகச் சங்கம்(CDU), சுதந்திர ஜனநாயகக் கட்சி (FDP) போன்ற கட்சிகள் வெளிநாட்டவர்களுக்கான சட்டத்தை இறுக்கமாக்க வேண்டுமென கூறுகின்றன. இத் தேசிய நீரோட்டத்தில் பசுமைக்கட்சி (GREEN) ஒத்து நடை போடுகிறது. நாசிக் கட்சியானது இத் தேசிய வாதத்தின் மீது சவாரி செய்கிறது.

இதேபோல இங்குள்ள ஜனநாயக உரிமைகள் யாவும் சமகாலத்தில் நசுக்கப்படுகின்றன. "17 மில்லியன் கிழக்கு ஜேர்மன் மக்களின் எண்ண அபிப்ராயங்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்காமல் கடந்த 6 மாத காலமாக ஜேர்மன் அரசு அவர்களின் முதுகின் மீது தம் இஷ்டப்படி அரசியல் நடத்துகிறது". மேற்கு ஜேர்மனியினதும், மேற்கு பேர்லினதும் இந் நடைமுறையானது சிறைக் கைதிகளாக்காமலே உறைந்த பொருளாதார பனிப்போரை (COLD-WAR) மேற்கொண்டுள்ளதாக ஒப்பிட முடியும். இதனால் நாட்டின் அரசியல், சமூகப் பொருளாதார அமைப்புகள் யாவும் சுக்கு நூறாக்கப் படுகிறது.

இதுவரை காலமும் கிழக்கு ஜேர்மனியில் இருந்து வந்த சமூக உரிமைகளை உடைத்தெறிந்ததன் மூலம் நாம் பெருந் தொகையான வேலையில்லாத் திண்டாட்டத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது. சமூக அரசியல் பொருளாதார வாழ்க்கையில் பெண்கள் பங்களிப்பு குறைக்கப்படுகிறது. வெளிநாட்டவர்கள் மீதான எதிர்ப்புத் தன்மை தடையின்றி அதிகரிக்கின்றது. வேலைவாய்ப்புக்கள், இசைவான வாழ்க்கை முறை அனைத்தும் இல்லாமல் போகின்றது. இதனால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் பாராளுமன்ற ஜனநாயகம் மூலம் வெளிப்படக் கூடிய வாய்ப்புகள் அருகிப் போயுள்ளது. இது முன்னர் போல் அல்லாமல் கூடுதலான சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

** கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் இரு வேறுபட்ட சமூக அமைப்பு வடிவங்களைக் கொண்டிருந்தன. கிழக்கு ஜேர்மனியின் உடமைகள் பொது உடமையானதாகவும், அரசவுடைமையாகவும் விளங்கி வந்தன. அவை அரசுக்கே சொந்தமானவை. ஆனால் மேற்கு ஜேர்மனியில் இவை சில முதலாளிகளுக்கு மாத்திரமே சொந்தமானவை. இவ் வேளையில் கிழக்கு ஜேர்மனிக்கும் , மேற்கு ஜேர்மனிக்கும் அரசியல் ரீதியான செயற்பாடுகள் எப்படி அமையும் ? இவர்களுக்கு இடையே சமரசம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு உண்டா ?*

எனது கருத்தின்படி கிழக்கு ஜேர்மனியில் ஒரு சோசலிச சமுதாயக் கட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கான முயற்சியே அங்கு நடைபெற்றது. நான் மேலே கூறியபடி கிழக்கு ஜேர்மனிக்கும், மேற்கு ஜேர்மனிக்கும் இடையே சமரசம் ஏற்படுவதற்கான தேவை இல்லை. முன்னைய ஆளும் கட்சியான (SED) ஜேர்மன் ஐக்கிய சோசலிச கட்சி கலைக்கப் பட்டு (PDS) சோசலிச ஜனநாயகக் கட்சி என்ற வடிவம் பெற்றுள்ளது. சோசலிச ஜனநாயகக் கட்சியானது வலிமையான சமூக ஜனநாயகக் கட்சியின் போக்கைக் கொண்டிருந்தாலும் கிழக்கு ஜேர்மனியில் நிகழும் அரசியல் மாற்றங்களை தீர்மானிக்கவோ, நிற்பாட்டவோ இவர்களுக்கு அரசியல் செல்வாக்கு இல்லை. அத்துடன் இவர்கள் மீது குற்றச்சாட்டுக்களும், அச்சுறுத்தல்களும் சுமத்தப்பட்டு உள்ளதுடன் ஐக்கிய ஜேர்மனிக்கான புதிய தேர்தல் சட்டத்தை கொண்டு வருவதன்மூலம் இவர்கள் ஊமைகளாக்க பட்டுள்ளதுடன் இவர்கள் தேவையேற்படின் தடை செய்யப் படலாம். இவற்றைவிட பசுமைக் கட்சி, மக்கள் அமைப்பு போன்ற வற்றிற்கும் இதே நிலையே. மற்றைய அனைத்துக் கட்சிகளும் மேற்கு ஜேமன் கட்சிகளது ஆதிக்கத்தினை கொண்டுள்ளன. மக்கள் மத்தியில் இருந்து இன்னமும் இதற்கான எதிர்ப்புத் தோன்றவில்லை.

** ஐரோப்பியக் கூட்டில் ஜேர்மனியின் அரசியல் நிலைப்பாடு எவ்வாறு அமையும்?*


ஐரோப்பியக் கூட்டில் ஜேர்மனி தன்னைத் தொடர்ந்தும் ஒரு முதன்மைச் சக்தியாக வைத்திருக்கும். 80 மில்லியன் ஜேர்மன் மக்கள் தொகையுடன், தனது பொருளாதார மேம்பாட்டின் உடனும், இந்த இணைவின் மூலமும் தன்னை முதன்மைப் படுத்திக் கொள்ளும். இது கிழக்கு ஐரோப்பாவில் ஜேர்மன் முதலீடு செய்வதற்கும், குறிப்பாக சோவியத் யூனியனிலும் முதலீடுகளை இடுவதன் மூலம் சர்வதேச ரீதியாக தனக்கென ஒரு அடித்தளத்தை அமைத்துக் கொள்ளும். இந்த முதலீட்டு வழிமுறைகளின் விளைவினை நாம் போலந்தில் காணக்கூடியதாக இருக்கிறது. உலகில் யப்பான் - அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் பொருளாதார ரீதியாக கொண்டுள்ள செல்வாக்கினை ஐரோப்பியக் கூட்டின்மூலம் கைப்பற்றி ஸ்திரப்படுத்த எத்தனிக்கிறது. இதனால் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே முரண்பாடுகள் கூடி அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டின் மீது திணிக்கப் படுகிறது. ஏனெனில் முதலாளித்துவத்தின் (முதலீட்டின்) முக்கிய எதிரியான சோசலிச முகாம் தற்போது இல்லாமல் போயுள்ளது. இம் முதலீடுகள் உலகச் சந்தையில் தடையின்றி விரிவாக்கப் படுகின்றது. அதே நேரம் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையேயான போர் மூழும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. ●

## இந்த மண்ணும்
## எங்கள் வாழ்க்கையும்

நெஞ்சம் அதிர்ந்தது
பூஞ்சோலை புயலில் சிக்கி...
கோட்டை கொத்தளம்
சரிந்து மண்மேடாய்...
ஜீவராசிகள்
முழுவதும் அழித்து
மானிடம் மீட்க
கோஷங்கள் எழுப்பியே
மண்மேடுகளை அகழ்ந்து
நீசத்தனத் தின் சாட்சியாக...
கபாலங்களைத் தேடி
காட்சிக்கும் சாட்சிக்கும்
யாரை அழைத்து
காட்டப் போகின்றோம்.

மௌனமே
மௌனமாய் போனதால்
சம்மதம் என்பது
வழிவழியாயிற்றா?
சுடுகாட்டினுள்ளும்
சூனியத்தின் முகங்கள்
இவர்களது வாழ்க்கைக்கு
எந்த அகராதியில்
அர்த்தத்தைத் தேடுவது
சுவாசிக்கும் காற்றே
சூறாவழியாக வந்தால்
இலட்சியத்தின் இலக்கு...

ஜீவிதம் என்பது
ஜீவனை இழப்பதன் மூலம்
இங்கு தர்விக்கப்படுகிறது.
இவர்கள் தேடிய அமைதி
திருடப்பட்டு விட்டதால்
திசைகள் தோறும்
தேடிக்கொண்டிருக்கின்றார்கள்.



– ஜி. எம். பரம்சோதி –